மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

அக்டோபர் 2016

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 5



## இளையோரின் சமூகப் பொறுப்பும் கடமையும்

தனிச்சுற்றுக்கு மட்டும்

நன்கொடை ₹20/-

மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 5

அக்டோபர் 2016



விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக வெளியிடுபவர்
**தே. சைலட் மோனி**
27, வெயர்லெஸ் ரோடு,
குறிஞ்சி நகர் மேற்கு, கே.கே. நகர்,
திருச்சி – 620 021, தமிழ்நாடு

விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக அச்சிடுபவர்:
துர்கா கிராபிக், சென்னை
வரைகலை:
மேரிபா ஸ்கிரீன்ஸ், கடலூர்

தலைமை ஆலோசகர் மற்றும்
ஆசிரியர்:
**கிரேக் பியூ**

ஆசிரியர்கள்:
**I. ஜோசப் சகாயராஜ்**
**சுந்தர். G.**
**அப்டகீர்**
**S. சுபா**
**K. சுரேஷ் கண்ணா**
**C. ராஜாமணி**
**A. செல்வநாதன்**
**C. ஏழுமலை**
**M. கென்னடி ஜோன்ஸ்சேகர்**
**வசந்தி. B.**
**S. ஆதியா**
**P. சுரேஷ்**
**S. டெய்சி டயானா**
**S. அருளரசி**



சந்தா, விளம்பரம்,
படைப்புகள் மற்றும்
வாசகர்களின்
கேள்விகளுக்கு
**089400 51900**
என்ற எண்ணை
தொடர்பு கொள்ளவும்



இவ்விதழின் கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கனவு இதழின் நிர்வாகம் பொறுப்பல்ல.

படைப்புகளை பிரதி எடுத்துவைத்துக் கொண்டு எங்களுக்கு அனுப்பவும்.


## மாற்றுத் திறனாளிகள் நான்கு பேர் Rio Paralympics-ல் பதக்கம் வென்று இந்தியாவை தலை நிமிர வைத்துள்ளனர்.

**தங்கவேலு மாரியப்பன்** (High Jump) – தங்கப் பதக்கம்
**தேவேந்திர ஜகாரியா** (Javelin Throw) – தங்கப் பதக்கம்
**தீபா மாலிக்** (Shot Put) – வெள்ளிப் பதக்கம்
**வருண் சிங்** (High Jump) – வெண்கலப் பதக்கம்



இவர்களில் 22 வயதாகும் தங்கவேலு மாரியப்பன் சேலம் மாவட்டத்தைச் சார்ந்தவர். இவரின் தாய் ஒரு தினக்கூலி. இவருக்கு 5 வயது இருக்கும்போது அரசுப் பேருந்து ஏறி இறங்கியதில் ஒரு காலை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

*மாரியப்பனால் முடிந்தது உன்னாலும் முடியும் !*
*உன்னில் புதைந்திருக்கும் திறமைகளை வளர்த்தெடு!*
*மாறிடும் உன் வாழ்வு!*

## உள்ளே...


என் பேனாவிலிருந்து... 3
நீ இந்தியாவிக்குத் தேவை 5
ஆங்கிலம் 7
வாழ்க்கை வரலாறு ஆகட்டும் 8
உன்னை அறிந்தால்... ஒழுங்கமைவு 10
மார்ட்டின் லூதர் கிங் 13
சரோஜினி நாயுடு 15
திரைப்பட விமர்சனம் அப்பா 17
தலைமை ஏற்க வாருங்கள் மாறுவோம், மாற்றுவோம் 18
இளையோரின் சமூகப் பொறுப்பும் கடமையும் 20
நகர நாகரிகம் 24
கனவு இதழின் சொந்தக்காரர்கள் 26






# என் பேனாவிலிருந்து...

இந்தியா - நினைத்த மாத்திரத்திலேயே ஒருவரை பெருமையடைய செய்யும் மிகப் பெரிய ஜனநாயகம். இந்தியா பன்முகம் கொண்ட நாடு. 1651-க்கும் மேற்பட்ட மொழிகள், 235க்கும் அதிகமான இனங்கள், பல்வேறு மதங்கள் (இந்துமதம், இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கிய மதம், புத்த மதம், .....) இருப்பினும் இந்தியா என்கின்ற புள்ளியில் அனைவரும் இணைகின்றோம்.

இந்தியா, இந்தியர் என நினைக்கும்போது நமக்குள் ஏற்படும் உணர்வுகள் என்ன? அளவிட முடியாத அளவுக்கு பெருமை, ஆனந்தம். இந்தியன் என்பது நம் ஒவ்வொருவரின் அடையாளம். சாதி, இனம், மொழி என அனைத்து வேறுபாடுகளையும் களைந்து நிற்க உதவும் மகத்தான அடையாளம்.

உணர்வுகளைத் தாண்டி, இந்தியன் ஒவ்வொருவருக்கும் மிகப்பெரிய சமூகப் பொறுப்பு உள்ளது. நமது நாட்டை பாதுகாக்க வேண்டியதும், அனைத்து மக்களும் இணைந்து மகிழ்வுடனும், வளமுடனும் வாழும் நாடாக மாற்ற வேண்டியதும் ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும். இந்தியர் அனைவரும் இந்த சமூகப் பொறுப்பை தலையான கடைமையாகக் கொண்டு செயல்படும் போது நமது பாரதம் உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கும்.

இந்தியனாய் நமக்குள்ள சமூகப் பொறுப்புகளில் குறிப்பிடத்தக்கவைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்:

- இந்திய அரசியல் அமைப்பை மதிப்பதும், அதற்குட்பட்டு செயல்படுவதும்
- அரசு நிறுவனங்களை, தேசிய கொடியை, தேசிய கீதத்தை மதிப்பது
- இந்திய வரலாற்றை, சுதந்திர போராட்டத்தைப் புரிந்து கொள்ளுதலும், நாட்டுக்காக உயிர் நீத்தத் தியாகிகளை மதித்தலும்
- இந்தியர் அனைவரும் சமம், சகோதர; சகோதரிகள் என்கின்ற உணர்வினை வளர்த்தெடுப்பது
- பொது பாதுகாப்பை உறுதிச் செய்வதும், வன்முறையை அறவே தவிர்ப்பதும்
- தேர்தலில் வாக்களிப்பதும், ஜனநாயக நீரோட்டத்தோடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வதும்,
- பொதுச் சொத்துக்களை பாதுகாத்தலும், உருவாக்குதலும்,
- மொழி, இனம், சாதி - இவைகளைக் கடந்து மனித நேயத்தோடு உறவாடுதலும், வாழ்தலும்

நாடு உனக்கு என்ன செய்தது எனக் கேட்காதே; மாறாக நீ நாட்டிற்கு என்ன செய்தாய் என்று கேள்
♦John F. Kennady

- ✌ நாட்டின் உள், வெளி பாதுகாப்பினை உறுதிப்படுத்துதலும், தேவைப்படின் இந்திய இராணுவத்தில் இணைந்து பணியாற்றுதலும்,
- ✌ இந்திய பாரம்பரியத்தை, கலாச்சாரத்தை மதிப்பதும் அதில் பெருமைக் கொள்வது,
- ✌ இந்தியாவின் இயற்கை வளங்களை, உயிரியல் பல்வகைமையை பாதுகாப்பதும், அனைத்து உயிர்கள் மீதும் அன்பு கொள்ளுதலும்
- ✌ இந்தியாவின் ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சிக்காகவும், அதன் பயன்களை அனைத்துத் தரப்பு மக்களும் பெற்றிடுவதற்காக உழைப்பதுமே

உங்கள் கைகளில் தவழும் கனவு இதழ் - நமது சமூகப் பொறுப்பைப் பற்றி சிந்தித்திட நம்மைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

**நாடு நமக்கு என்ன செய்தது என கருதாமல்**
**நாம் நம் நாட்டிற்கு என்ன செய்யலாம்** - என சிந்திப்போம்.

நல்ல குடிமகனாக, நல்ல தலைவர்களாக உருவாகுவோம். **இளையோர்களே, உங்கள் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயல்படுவீர்களானால், இந்தியா வல்லரசாக மட்டுமல்ல, அதைவிட மேலாக, அனைவரும் அனைத்து வளங்களும் பெற்று வாழும் நாடாக உருப்பெறும்.**

இந்த இதழுக்கு கட்டுரைகள், கவிதைகள், விளக்கப் படங்கள், செய்திகள் அளித்த அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

**கிரேக் பியூ**, MA

*Gregory T. Buie*

Visions Executive Director / Co-Founder

**கனவு**

**இதழுக்கு நன்கொடையளித்த**
**இளையோருக்கு வாழ்த்துக்கள்**

**திரு. S. முருகன்,** M.A., B.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
மற்றும்
**புனித சகாய அன்னை மேல்நிலைப் பள்ளியில்**
**+1, +2** (C & C1) **பயிலும்**
இவரின் மாணவர்கள்
**ரூபாய் 750/-** நன்கொடையளித்துள்ளனர்

**அழகானந்தல்,**
**இளையோர்**
**கற்றல் மற்றும் வலுப்படுத்தல்**
**மைய மாணவர்கள்**
**ரூபாய் 520/-**
**நன்கொடை**
**அளித்துள்ளனர்**



வாக்குரிமை துப்பாக்கி போன்றது. அதன் பயன்பாடு பயன்படுத்துவோரின் குணத்தைப் பொறுத்தது
♦ Theodore Roosevelt

# நீ இந்தியாவுக்கு தேவை



**கிரேக் பியூ**
*Greg Buie*

ரகு தவழுகின்ற வயதிலேயே அனைவரின் கவனத்தையும் தன்பால் ஈர்த்தவன். அவனிடம் காணப்பட்ட சுறுசுறுப்பும், கையில் கிடைத்தப் பொருட்களை எடுத்து ஆராயும் குணமும் அவனை குழந்தைகளிடமிருந்து வித்தியாசப் படுத்தியது. தனது குழந்தை மிகச் சிறந்தவனாக வளர்வான் என நினைத்து அவனது பெற்றோர் மிகவும் மகிழ்ந்தனர். இருப்பினும் பலவேளைகளில் அவனது சுட்டித்தனம் அவர்களின் பொறுமையைச் சோதித்தது.

ரகுவிற்கு பதினைந்து வயது. பள்ளியில் மிகச் சிறந்த மாணவன். ஆசிரியர்களின் செல்லப் பிள்ளை. ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதை மிகவும் கவனமாக கற்றுணர்ந்தான். படிப்பில் அவனுக்கு இருந்த ஆர்வத்தை கண்ட ஆசிரியர்கள் அவன் வளர்ச்சியில் மிகுந்த அக்கறைக் கொண்டிருந்தனர்.

திங்கட்கிழமை தோறும் பள்ளிக்கூடத்தில் கொடியேற்றும் நிகழ்வும், அனைவரும் இணைந்து பாடும் தேசிய கீதமும் ரகுவுக்கு மிகவும் பிடித்தவை. தேசிய கீதம் இசைக்கும்போது, தன்னை அறியாமலேயே உணர்வுகளில் மூழ்கிப் போவான். தேசத்திற்காக தன்னுயிர் நீத்த தலைவர்களின் கதைகளை மிகவும் ஆர்வமாக வாசிப்பான். அவைகளை தன்னுடைய நண்பர்களுடன் பகிர்ந்துக் கொள்வான். **பாரதம் நம் தேசம்** – என்பதில் மிகவும் பெருமை கொண்டான்.

அன்று மிகவும் முக்கியமான நாள். ரகுவுக்கு மிகவும் உற்சாகம் ஊட்டும் நாள். ஆம், இந்தியா சுதந்திரம் அடைந்த நாள். ரகு மட்டுமல்ல, 120 கோடி இந்திய மக்களும் இந்தியன் என பூரிப்படைந்திடும் நாள். அந்த நாளில் தனக்குள் அசைக்க முடியாத ஓர் எண்ணம் உருவாகுவதை ரகு உணர்ந்தான். 'ஏதாவது செய்ய வேண்டும் – எனது நாட்டிற்காக என்று முடிவெடுத்தான். சுதந்திர தினத்தன்று டெல்லியில் நடைபெறும் இராணுவ வீரர்களின் அணிவகுப்பும், சாகச நிகழ்ச்சிகளும் நாட்டின் மீது அவனுக்கிருந்த அக்கறையும் அவனை ஓர் இராணுவ வீரனாக பார்க்கத் தூண்டியது. ஆம், நான் இராணுவ வீரன் ஆவேன் என்று தனக்குள் முடிவெடுத்துக் கொண்டான். தனது எண்ணத்தை பிறருடன் பகிர்ந்து கொண்டான்.

ஆமா, இவரு கிழிக்கப் போகிறாரு – என்கின்ற கேளிப் பேச்சுகள் ரகுவை ஒன்றும் செய்யவில்லை. ஆசிரியர்களிடம் பேசினான், வழிகாட்டினார்கள். தனது பெற்றோரிடம் கூறினான், சம்மதித்தார்கள். இராணுவ வீரனாக வேண்டும் என்கின்ற எண்ணம் வலுப்பெற, பெற தனது நாட்டைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களும் உயர்வடைந்தன.

தமிழ் ஆசிரியர் குணசேகரன், ரகுவுக்கு மிகவும் பிடித்தவர். ஆனால் கண்டிப்பானவர். அதே நேரம் மாணவர்களின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். ரகுவின் வகுப்புக்கு மாணவர் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தமிழ் ஆசிரியரின் பொறுப்பு அது. வெறுமனே தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கூறாமல், தலைவரின் நல்ல பண்புகளை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். இந்தியாவில் தேர்தல் நடைபெறும் விதத்தை விளக்கினார். ரகுவுக்கு அவரின் செயல்பாடும் ஆர்வமும் மிகவும் பிடித்திருந்தது.

வகுப்புத் தலைவராக வர விருப்பமுள்ளவர்களின் பெயர்களை கேட்டு கரும்பலகையில் எழுதினார். எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் தலைவனாவதில் தனக்கு இருந்த ஆர்வத்தை ரகு வெளிப்படுத்தினான்.

நாட்டுப் பற்று என்பது நாட்டிற்காக தன்னை அர்ப்பணிப்பது. நாட்டின் தலைவருக்காக அல்லது அரசு அதிகாரிக்காக அல்ல.
♦Theodore Roosevelt

ஒவ்வொரு மாணவனையும் வகுப்புக்கு முன்னால் அழைத்த தமிழாசிரியர் 'தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன செய்வேன்' எனக் கூறச் சொன்னார். பலர் தயங்கினர், சிலர் உளறினர். ஆனால் ரகு மிகவும் தெளிவாகப் பேசினான். 'என்னை நீங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்தால், நான் மூன்று முக்கியமான செயல்பாடுகளை நம் பள்ளியில் செய்வேன்' என்றான். அனைவரும் அவனது பேச்சை ரசித்தனர். தமிழாசிரியரும் அவனது பேச்சை ரசித்தார். என்ன செயல்பாடுகளை ரகு சொல்லப்போகிறான் என்கின்ற ஆர்வம் அனைவரையும் தொற்றிக் கொண்டது.

'நான் வகுப்பு தலைவனானால் உங்களுடன் இணைந்து நம் பள்ளி வளாகத்தை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வேன்; பள்ளி வளாகத்திற்குள்ளும், பள்ளியைச் சுற்றியுள்ள இடங்களிலும் பயன்தரும் மரங்களை நடுவேன்; படிப்பில் பின் தங்கியுள்ள மாணவர்களுக்கு மாலை நேரத்தில் பாடம் சொல்லிக் கொடுப்பேன்' என்று ரகு சொல்லி முடிக்கவில்லை, அனைவரும் எழுந்து நின்று கைத்தட்டினார்கள்.

என்னவொரு தெளிந்த சிந்தனை என உள்ளூர பெருமைப்பட்டார் தமிழாசிரியர். ரகுவும், கவிதா என்ற மாணவியும் வகுப்புத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தனது மகிழ்வினை அப்பா, அம்மாவிடமும் உறவினர்களிடமும் கூறுவதற்காக ஓடோடி போனான் ரகு. வீட்டிற்கு போகும் வழியில் சாலையோரத்தில் இருந்த ஒருகடையில் சாக்லெட் வாங்குவதற்காக நின்றான். அப்போது தனக்கு முன்னால் நின்ற தனது பள்ளியைச் சேர்ந்த மாணவர்



இரண்டு சாக்லெட்டுகளை திருடியதைப் பார்த்து வேதனைப் பட்டான். என்ன செய்வது என தனக்குள்ளே சிந்தித்தான். அந்த மாணவனைப் பின் தொடர்ந்து சென்று அவனிடம், 'நீ செய்தது தவறு. திருடுவது குற்றம்' என கூறினான். அந்த மாணவன் செய்வதறியாது நின்றான். 'பயப்படாதே, நீ திருடியதை நான் அவரிடம் சொல்ல மாட்டேன். அந்த சாக்லெட்டுகளை திரும்ப வைத்து விடலாம்' என்று கூறி, அவனை மீண்டும் கடைக்கு அழைத்துச் சென்றான். எதுவும் கூறாமலேயே அந்த சாக்லெட்டுகளை அங்கிருந்து சாக்லெட் பாக்ஸில் போட்டார்கள். அவனுக்கும் தனக்குமாக இரண்டு சாக்லெட்டுகளை வாங்கிக்கொண்டு காசு கொடுத்தான். கடைக்காரர் அவனைப் பார்த்து புன்னகைத்தார். காசு வேண்டாம் என்றார். 'ஏன்?' எனக் கேட்டான் ரகு. '**நீ நன்றாக வருவாய்... நீ இந்தியாவுக்குத் தேவை**' என்றார் கடைக்காரர்.

தமிழில் – **தே. சைலா**



**Abel Wudu**
**Deaf Teacher**
**Visions Model Deafness Center, Bahir Dar, Ethiopia**

நன்றி: கதைகளின் விளக்கப்படங்களுக்காக




## பழமொழிகள்

- ஊர் எல்லாம் வாழ்கிறது என்று
  வீடு எல்லாம் அழுது புரண்டாலும் வருமா?
- வீட்டுக்கு செல்வம் மாடு,
  தோட்டச் செல்வம் முருங்கை.
- கடுகு கனவும் கனவுதான்,
  கற்பூரம் கனவும் கனவுதான்.
- ஓட்டைப்பானையிலும் சர்க்கரை இருக்கும்.
- முன் கை நீண்டால், முழங்கை நீளும்.
- நாவு அசைய, நாடு அசையும்.
- சூடு கண்ட பூனை அடுப்பங்கரையில் சேராது.
- அடி நாக்கிலே நஞ்சும், நுனி நாக்கிலே அமிர்தமுமா?
- உட்சுவர் இருக்க, புறச்சுவர் பூசலாமா?
- நல்லவர் உறவை நாலு பணம் கொடுத்துச் சம்பாதிக்க வேண்டும்.
  கெட்டவர் உறவை பத்து பணம் கொடுத்து நீக்க வேண்டும்.



ஒவ்வொருவரும் தனக்கு முன்னால் குவிந்திருக்கும் பனிக்கட்டிகளை (தடைகளை) அகற்றினால், நாடு அனைவருக்கும் வாழ்வதற்கு ஏற்றதாகும் ♦Emerson

கனவு இதழின் புதிய முயற்சி

# ஆங்கிலம்

வாழ்வில் முன்னேற தடையாகிவிடக் கூடாது

நம் ஒவ்வொருவருக்கும் வசப்பட வேண்டும்!

# KNOW ENGLISH, Experience SUCCESS

## Simple dialogue for greeting your friend or anyone close to you

1. A - Hello, Good morning, Madam
   B - Hello, Good morning, Kavitha

   A - Hello, Kavitha. How are you?
   B - I am fine. Thank You, Madam.

2. A - Hello, I am Vinoth. Glad to meet you.
   B - Glad to meet you, Vinoth. I am Suresh.

   A - Hello, Suresh. How do you do?
   B - I am fine, thanks.

## Basic Sentence Construction (Use of “Be” Verb)

| Subject | “Be Verb” | Compliment |
|---|---|---|
| I | am | a teacher. |
| I | was | a student. |
| I | will be | a professor. |
| We | are | animators. |
| You | are | a tailor. |
| You | were | an electrician. |
| You | will be | a businessman. |
| He | is | an artist. |


நான் யாராக இருக்கிறேன் / இருந்தேன் / இருப்பேன்

அல்லது

ஒரு பொருள் எதுவாக இருக்கிறது / இருந்தது / இருக்கும்

என்பதைக் குறிப்பிட **“Be Verb”** பயன்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| She | was | a receptionist. |
| They | are | leaders. |





## Related Questions


1. Who are you? - I am a student.
2. Are you a student? - Yes, I am a student.
3. What does your mother do? - My mother is a homemaker.
4. What does your father do? - My father is a carpenter.
5. Are you not an engineer? - No, I am a doctor.
6. What is that? - It is a playground.
7. Who are they? - They are my friends.
8. Are they leaders? - Yes, they are leaders.
9. Is she a dancer? - Of course, she is a beautiful dancer.
10. Is this a class room? - No, it is not.
11. Will you be an animator? - Oh, yes! I want to be an animator.

| | | | |
|---|---|---|---|
| I | am | was | will be |
| He, she, it | is | was | will be |
| You, they, we | are | were | will be |

## Use the Right word / Know the Meaning / Make the Sentence

1. **Ability** (noun) - Power of skill to do something which is physically or intellectually good
   * He has the **ability** to lift this heavy luggage in one go.
2. **Capacity** (verb) - Power to contain or hold
   * This jar is full. It does not have any more **capacity** to hold this liquid. It can only hold a small amount.

*I. Joseph Sahayaraj*



வாக்களிப்பது ஒவ்வொருவரின் புனிதமான சமூகக் கடமை
◆Theodore Hesburgh



# வாழ்க்கை வரலாறு ஆகட்டும்

**கிரேக் பியூ**

தமிழில் – **தே. சைலட**

தனது வீட்டிற்கு பக்கத்தில் இருந்த நூற்பாலை ஜமுனாவுக்கு மிகவும் பிடித்த இடம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தன்னுடைய அம்மாவோடு அங்கு போவாள். கலர் கலராக காய வைக்கப்பட்டிருக்கும் நூற்களை பார்த்து பூரிப்படைவாள். பட்டுப் போன்ற நூல்களை மெல்லிய தன் விரல்களால் தொட்டுப் பார்ப்பதில் அப்படியொரு ஆனந்தம். தனது அம்மாவின் வயதொத்த பெண்கள் வண்ண நூல்களை இணைத்து உருவாக்கும் துணிகளை ஆர்வமுடன் பார்ப்பாள்.

ஜமுனா அம்மா தினமும் 10 மணி நேரம் வேலைச் செய்யும் இடம் இது. அவளது அப்பா விபத்தில் இறந்த பிறகு உறவுக்காரர்கள் விலகிக் கொண்டனர். இளம் வயது அவளது அம்மாவுக்கு. ஜமுனாவை வளர்த்தெடுக்க அயராது உழைத்தாள் அவளது அம்மா. சிறுக சிறுக சேமித்து துணிக்கடை ஒன்றை ஆரம்பித்தாள் ஜமுனாவின் அம்மா. சுட்டிப் பெண் ஜமுனா, அம்மாவின் உழைப்பை ரசித்தாள். வாடிக்கையாளர்களிடம் அம்மா பழகும் விதத்தை ரசித்தாள். உழைத்தால், உழைப்புடன் நேர்மையும் இருந்தால் வாழ்வின் எந்தத் தடைகளையும் தகர்த்தெறிய முடியும் என சின்ன வயதிலேயே புரிந்துக் கொண்டாள்.

சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட கடை மிகப்பெரிய நிறுவனமானது. ஐம்பதுக்கும் மேற்பட்டோர் வேலைச் செய்தனர். அம்மா தனது வருமானத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்காக கொடுப்பதை மிகவும் ஆர்வமாகப் பார்ப்பாள். தானும் படிக்கும் காலத்திலேயே பிறருக்கு உதவ வேண்டும், அம்மாவைப் போல கடினமாக உழைக்க வேண்டும் – என்ற எண்ணங்களை தனக்குள் வளர்த்துக் கொண்டாள் ஜமுனா.

ஒருநாள் பள்ளியிலிருந்து வீட்டிற்கு திரும்பும் போது, மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த நபர் ரோட்டில் இருந்த பள்ளத்தில் விழுந்ததைப் பார்த்து கதறிவிட்டாள். கூச்சல் போட்டு பிறரை உதவிக்கு அழைத்தாள். அவளின் மனதிற்குள் ஆயிரம் கேள்விகள்: ‘அவர் ஏன் கீழே விழுந்தார். ரோட்டில் ஏன் பள்ளம் இருந்தது, பள்ளத்தை சரி செய்வது யாருடைய பொறுப்பு, ஏன் பெரியவர்கள் எல்லாம் அந்தப் பள்ளத்தை கண்டும் காணாமல் போகின்றார்கள்?’.

தனது தாயிடம் சொன்னாள். மகளை இழுத்து உச்சி முகர்ந்த அவள், ‘உன்னால் என்ன செய்ய முடியுமோ, அதனைச் செய்திடு‘என்றாள். ‘உன் சக மாணவர்களோடு பேசு, உன் ஆசிரியர்களிடம் ஆலோசனை கேள்‘ – என தனது மகளை சிந்திக்க தூண்டினாள் அந்தத் தாய்.

அடுத்த நாள் பள்ளிச் சென்றதும் முதல் வேலையாக தனது தோழிகளிடம் பேசினாள். அவர்கள் இணைந்து சென்று வகுப்பாசிரியரிடம் ஆலோசனைக் கேட்டனர். ஆசிரியர் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஜமுனாவின் முயற்சியை வாழ்த்தினார். பஞ்சாயத்துத் தலைவருக்கும், மாவட்டப் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும் மனு அனுப்பக் கூறினார்.

ஜமுனா எழுதிய முதல் மனு சமூக மாற்றத்திற்காக அவள் எடுத்து வைத்த முதல் அடி. நான்கு நாட்களில் மாவட்ட அதிகாரிகள் பள்ளிக் கூடத்திற்கு வந்து மாணவியரை வாழ்த்தினர். அவர்களது முத்தான முயற்சியை உளமார பாராட்டினர். மாவட்ட அதிகாரிகளுடன் அமர்ந்து பேசும்போது தனக்குள் ஒளிர்விட்ட நம்பிக்கைச் சுடரை, எண்ணங்களை ஜமுனா ரசித்தாள்.

உன்னால் முடியும் என்று எண்ணுவதையோ அல்லது முடியும் என்று கனவு காண்பதையோ துணிந்து தொடங்கு. உனது துணிவிலேயே அறிவும் ஆற்றலும் மந்திரமும் அடங்கியுள்ளன ♦Goethe


பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரி வாழ்விற்குள் காலடி எடுத்து வைத்தாள். தன்னுடன் படித்த மாணவியர்கள் பலரும் கல்லூரியில் சேராதது ஏன்? விடை தேடினாள். பள்ளிப் படிப்பை அவளுடைய கிராமத்தில் உள்ள மாணவர்கள் தொடருவதில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்தாள். அம்மாவிடம் கலந்தாலோசித்து, மாலை நேர கற்றல் மற்றும் வழிகாட்டும் மையம் ஒன்றை ஆரம்பித்தாள்.



கிராமம் ஜமுனாவை மதித்தது. அனைவர் மனதிலும் இடம் பெற்றாள். தான் வளர்வதுடன் பிறரும் வளர்வதை ரசித்தாள்.

பத்திரிக்கையில் வந்த ஒரு செய்தி இவளை உலுக்கியது. “அரசு மருத்துவமனையில் போதிய இரத்தம் இருப்பு இல்லாததால் 10 நோயாளிகள் உயிரிழந்தனர்” – என்கின்ற செய்தி இவளை மேலும் சிந்திக்கத் தூண்டியது.

இரத்த தானத்தின் அவசியம், முக்கியத்துவம் இவைகளை கற்றுணர்ந்தாள். ரோட்டரி கிளப்புடன் இணைந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை இரத்ததான முகாமிற்கு ஏற்பாடு செய்தாள். முதலில் பலரும் தயங்கினர். இவளும் இவளது தாயும் முன்னின்று இரத்த தானம் செய்வதைக் கண்டு பலரும் முன் வந்தனர். அதுவே மிகப் பெரிய இயக்கமானது.



படிப்புடன், சமூகப் பணியும் இணைந்து கொண்டது. பல நிறுவனங்கள் ஜமுனாவை சிறப்புரையாளராக அழைத்து பெருமைப்படுத்தியது. **தனது வாழ்க்கை வரலாறு ஆகின்றது என்கின்ற எண்ணம் அவளது முகத்தில் புன்னகையாய்ப் பூத்தது.**



**பாலின கொடுமைகளுக்கு ஆளான**

## நாடியா

## (Nadia Murad Basee Tahee)

**ஐக்கிய நாடுகள் சபையின் நல்லிணக்கத் தூதர்**

எத்தகைய இடர்பாடுகளும் இன்னல்களும் ஒருவரின் சமூக அக்கறைக்கு தடை போட முடியாது என்பதற்கு **நாடியா** மிகச் சிறந்த எடுத்துக் காட்டு.

2014-ஆம் ஆண்டு ஈராக்கில் IS தீவிரவாதிகளால் சுற்றி வளைக்கப்பட்டு. பாலியல் அடிமையாக விற்கப்பட்ட ஆயிரமாயிரம் குழந்தைகளில், பெண்களில் ஒருவர் இவர். யாசிடி (yazidi) இனத்தைச் சேர்ந்தவர்.


IS தீவிரவாதிகளின் பிடியில் இருந்து தப்பித்து, தன்னைப் போல கடத்தப்பட்டு பாலியல் கொடுமைகளுக்கு ஆளான, ஆளாகிக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் பெண்களின் விடுதலைக்காக, மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துள்ள இவரை ஐக்கிய நாடுகள் சபையின் நல்லிணக்கத் தூதராக நியமித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

**வாழ்வையே இழக்கும் சூழலிலும்**
**சமூக அக்கறை கொள்ள முடியுமெனில்...**

**நம்மால் முடியாதா....?**


**நன்கொடைகள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**

| | |
|---|---|
| முன் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 4000/- |
| பின் அட்டை வெளிப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 5000/- |
| பின் அட்டை உள்ப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 3000/- |
| உள் முழு பக்கம் (ஒரு கலர்) | ரூ. 2000/- |
| உள் அரை பக்கம் (ஒரு கலர்) | ரூ. 1000/- |



உன்னை அறிந்தால்

# தலைவனாகலாம்

தே. சைலட் மோனி

தொடர்கட்டுரை 3

# ஒழுங்கமைப்பு

## ORGANISATION

**தன்னை அறிந்தவன் தலைவனாகிறான். யாரெல்லாம் தன்னுடைய பலங்களையும், பலவீனங்களையும் அறிந்து பலங்களை வாய்ப்புகளாகவும், பலவீனங்களை பலங்களாகவும் மாற்றுகின்றார்களோ, அவர்கள் தலைவர்கள் ஆகிறார்கள் எனவும்,**

**தலைவனானவர்கள், வரலாறு படைத்தவர்கள், பல்வேறு துறைகளில் சாதித்தவர்கள், தடைக் கற்களை படிக்கற்களாய் கட்டமைத்தவர்கள் அனைவரும் நேரத்தை சரியாக நிர்வகித்தவர்கள் எனவும் முந்தைய கட்டுரைகளில் பார்த்தோம்.**

வாழ்க்கையை நமக்கும் பிறருக்கும் பயனுள்ளதாக அமைத்திட நம்மை நாமே ஒழுங்கமைத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

### ஒழுங்கமைப்பு என்பது

- நம்மை சுத்தமாக, பிறர் விரும்பத்தக்கதாக வைத்துக்கொள்வது
- நாம் வாழும் இடத்தை – அது வீடாக இருக்கலாம், பள்ளி/கல்லூரியாக இருக்கலாம், கிராமமாக இருக்கலாம், நேர்த்தியாகப் பேணுவது
- நாம் செய்கின்ற எந்தவொரு செயலையும் வரையறையிட்டு கட்டுக்கோப்பான விதத்தில் நடைமுறைப்படுத்துவது

எந்தவொரு செயலையும் நேர்த்தியாக செய்கின்றவர்; வாழுமிடத்தை சிறப்பாக பேணுகின்றவர்கள்; தன் சுத்தத்தை, ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு செயல்படுகின்றவர்கள் மட்டும்தான் சாதிக்கின்றார்கள். தன்னிலும், தான் வாழும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை கொண்டுவருகிறார்கள்.

தலைவனாக / தலைவியாக இச்சமூகத்திற்கு தன்னை அர்ப்பணிக்க விரும்பும் இளையோர்கள் நேர்த்தியாக ஒவ்வொரு செயலையும் செய்வது மிகவும் முக்கியமானது.

### தன் சுத்தமும் சுகாதாரமும்

**கந்தையானாலும் கசக்கிக் கட்டு – கூழானாலும் குளித்துக் குடி** என்றார்கள் பெரியோர்கள். சுத்தத்திற்கும் ஆரோக்கியமான வாழ்விற்கும் நெருக்கமான உறவு உண்டு. நம்மை சுத்தமாகப் பேணுவது நமது ஆளுமையை வளர்ப்பதோடு, பிறரிடம் நம்மைப் பற்றி நல்ல எண்ணங்களை உருவாக்குவதற்கும் உதவுகின்றது.

வறுமை – ஆகவேதான் அழுக்காக, சுத்தமில்லாமல் இருக்கிறேன் என்பதெல்லாம் வெறும் சாக்கு போக்கு. சுத்தமாக இருப்பதும் சுகாதாரமாக வாழ்வதும் நமது பழக்கமாக (habit) மாறவேண்டும்.





எனது ஓடுகின்ற கால்கள் ஓய்வெடுக்கும்போது
நான் எடுத்துக்கொண்ட பயணம் முடிந்திருக்க வேண்டும்

தன் சுத்தமும் சுகாதாரமும் – நமது உடலை நாம் சுத்தமாக வைத்துக் கொள்வதிலும், தலைமுடியை சீராக வைப்பதிலும், நகங்களை தூய்மையாக வைத்துக் கொள்வதிலும், அழுக்கற்ற ஆடைகளை உடுப்பதிலும், உணவிற்கு முன்பும் பின்பும் கைகளை கழுவதிலும், தினமும் உடற்பயிற்சிகள் மேற்கொள்வதிலும் – அடங்கியுள்ளது.

தன் சுத்தமும் சுகாதாரமும் நமக்கு நல்ல மன வலிமையை (**Mental Health**) அளிக்கின்றது. நமக்குள் நம்மை அறியாமலேயே புத்துணர்வு உருவாகின்றது. பிறருடனான உறவுகள் மேம்படுகின்றது.

## வாழும் இடத்தை நேர்த்தியாகப் பேணுதல்

வீடு வாழும் இடம். வீட்டின் ஒவ்வொரு பகுதியும் நாம் ரசிப்பதாக இருக்க வேண்டும். வீடு குப்பைத் தொட்டியாக மாறிவிடக் கூடாது. நமது வீட்டிலேயே நமது பொருட்கள் பெரும்பாலும் எங்கிருக்கின்றது என்று நமக்குத் தெரிவதில்லை. முக்கியமான பொருட்களை, கோப்புகளை தேடுவதில் கால விரயம் அதிகம். வீடு – நாம் வாழும் இல்லம் குப்பைத் தொட்டியாக இருப்பதற்கு பல காரணங்கள். அவைகளில் குறிப்பிடத்தக்கவைகளாக…

- பயன்படுத்திய பொருட்களை கண்ட இடங்களில் எல்லாம் வீசியெறிவது
- தேவைக்கு அதிகமான பொருட்களை சேர்ப்பது
- தேவைக்கு பயன்படாத பொருட்களை ஒதுக்காமல் இருப்பது
- வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டிய பொருட்களை வைக்காமல் இருப்பது



வீடு குப்பைத் தொட்டியாக திகழ்வதற்கு முதன்மைக் காரணம் சோம்பல் மற்றும் தள்ளிப் போடுதல். பிறகு பார்க்கலாம் – என்கின்ற எண்ணமே நாம் வாழுமிடத்தை நேர்த்தியாக பேணாததற்கான அடிப்படை. நாம் வாழும் இடத்தை சீராக சிறப்பாக பேணும் போது, முதலில் நமது வீட்டை, அதன் அமைப்பை அனுபவிக்க வேண்டும் என்று தோன்றும். வேலைகள் எளிதாகும். செயல் உத்வேகம் பெறும். செயல்திறன் அதிகரிக்கும், உறவுகள் மேம்படும்.

## பள்ளி/கல்லூரியை சுத்தமாக பேணுதல்

கல்விக் கூடத்தை ஆலயம் என்பார்கள். நமது இரண்டாவது வீடு நாம் கற்கும் கல்வி நிலையங்கள். வீட்டிற்கு அடுத்தபடியாக கல்வி நிலையங்களில் தான் நாம் அதிகமான நேரத்தை செலவழிக்கின்றோம்.

நாம் கல்வி கற்கும் பள்ளிக் கூடங்கள் எவ்வாறு உள்ளன? சுத்தமாக, ஒழுங்கமைக்கப்பட்டதாக உள்ளனவா? – என்றால் பெரும்பாலும் இல்லை. அதற்கு கூறப்படும் காரணம் – நிதியில்லை.

நமது வகுப்பறைகளை, பள்ளி / கல்லூரி வளாகங்களை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு எவ்வளவு பணம் தேவை? என்னைக் கேட்டால் நல்ல எண்ணம் மட்டுமே போதுமானது. பள்ளி / கல்லூரி அலுவலகங்களில், ஆசிரியர்களின் அறைகளில் மண்டிக் கிடக்கும் குப்பைகளைப் பார்க்கும் போதும், ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் புத்தகங்களை பார்க்கும் போதும், உடைந்து உருக்குலைந்து போன இருக்கைகளை காணும்போதும் – இப்படித்தான் பள்ளிக்கூடம் இருக்க வேண்டும் போல் என இளையோர்கள் நினைத்து செயல்படுகின்றார்களோ என எண்ணத்தோன்றுகிறது.



300 மாணவர்கள் படிக்கும் பள்ளியை சுத்தமாக வைத்துக் கொள்ள எவ்வளவு நேரம் தேவைப்படும். ஆனால் அதை நாம் செய்வதில்லை. வேண்டாத பொருட்களை குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட நாம்இன்னும் பழக்கப் பட வில்லை. நமது கிராமத்தல் தானாகவே முளைத்து வளர்ந்து கிடக்கும் பயனுள்ள மரச்செடிகளை கொண்ட வந்து நமது பள்ளி வளாகத்தை பசுமையாக்க எத்தனை நாட்கள் வேண்டும்? யார் செய்வது? யார் தண்ணீர் ஊற்றுவது? யார் பாதுகாப்பது? என்கின்ற கேள்விகளுக்குள்ளே நாம் காணாமல்போகின்றோம்.

நமது தலைமைப் பண்பு இங்குதான் வடிவம் பெற வேண்டும். முதல் முயற்சியை எடுப்பவன் வழி நடத்துகின்றான். பிறர் சிரிக்கலாம். ஏன் தடுக்கக் கூட

செய்யலாம். ஆனால் நீ கொண்டு வர நினைக்கும் ஆரோக்கியமான மாற்றங்களை ஒருவரும் தடுக்க முடியாது.

### நமது பள்ளியை / கல்லூரியை ஒழுங்கமைத்திட - சில யோசனைகள்

- வகுப்புகள் தோறும் குப்பைத் தொட்டி, பள்ளி வளாகத்திலும் முக்கியமான இடங்களில் குப்பைத் தொட்டிகள்
- மட்கும் குப்பை, மட்காத குப்பைகளை மாலை நேரங்களில் பிரித்தெடுத்து - மட்கும் குப்பையை செறிவூட்டிய உரமாக்குவது



- குப்பைகளை வீசாதீர்கள் என அறிவிப்பு பலகைகளை வைப்பது
- வகுப்பறைகளில் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைப்பது
- பள்ளிவளாகத்தில் பயன்தரும் மரங்களையும், கண்கவர் செடிகளையும் நட்டு, பேணி பாதுகாப்பது

எனக்கென்ன? - என்று நினைக்காதே இளைஞனே. மாற்றம் உன்னிடமிருந்து ஆரம்பமாகட்டும். உனக்குள் புதைந்து கிடக்கும் தலைமைப் பண்புகள் வடிவம் பெறட்டும்.

### சுத்தமான கிராமங்கள் ஆரோக்கியமான கிராமங்கள்

பள்ளிக் கூடமொன்றில் மாணவர்களிடம் தங்களுடைய கிராம வரைப்படத்தை வரைந்திடச் சொன்னேன். பலருடைய கிராம வரைப்படங்களிலும் தெருநாய்கள், பன்றிகள், மரமற்ற தெருக்கள் இடம்பெ பற்றிருந்தது.

நமது கிராமங்கள் எவ்வாறு உள்ளன? நமது கிராமத்தில் / நகரத்தில் ஒழுங்கமைவு எந்தளவிற்கு உள்ளது?

பிளாஸ்டிக் பேக்குகளை ஒழிப்போம் என்கின்ற அறிவிப்பு பலகைக்கு கீழே பிளாஸ்டிக் பைகள் குவிந்து மலையாய் காட்சியளிக்கின்றது. குடி தண்ணீர் தொட்டிகளை சுற்றி பன்றிகள் வாழ்கின்றன. சாக்கடை நமது வீட்டின் முன்பு வரை வந்து செல்கின்றன. தெருக்கள் எல்லாம் வெறுமையாய்க் காட்சியளிக்கின்றது.

கிராமத்தை / நமது ஊரை ஒழுங்கமைவு செய்ய வேண்டியது யாரின் பொறுப்பு? தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் பொறுப்பு என்று நாம் கைக்கட்டி கொண்டு ஒதுங்கிவிடுவது நியாயமா?

இளையோரே, உங்கள் தலைமைப் பணி கிராம ஒழுங்கமைவுக்கு மிகவும் அவசியம். நமது கிராமங்கள் / நகரங்கள் சுத்தமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்தாலே போதும், மாற்றம் தானாய் வரும்.

எங்கெல்லாம் மரக்கன்றுகள் நடமுடியுமோ, அங்கெல்லாம் மரக்கன்றுகள் நட்டுப் பராமரியுங்கள்.

பஞ்சாயத்து தலைவருடன் கலந்தாலோசித்து கிராமம் முழுவதும் குப்பைத் தொட்டிகளை வைத்து குப்பைகளை அகற்றுங்கள்.

மாவட்ட நிர்வாகத்திடம் கூறி தெருநாய்களையும், பன்றிகளையும் அப்புறப்படுத்துங்கள்.

கழிவு நீர் சீராக சென்றிட கழிவு நீர் கால்வாய்களை சீரமைத்திடுங்கள்.

படிப்பகங்கள் மற்றும் நூலகங்களைத் தூய்மையாகப் பேணுங்கள்.

ஒழுங்கமைவு - தன்னிலும், தான் வாழும் இல்லத்திலும், நாம் வசிக்கும் கிராமத்திலும் வெளிப்படும் போது நமக்கு பல அனுகூலங்கள் கிடைக்கும்.

1. நேரத்தை நாம் சிறப்பாக நிர்வகித்திட முடியும்
2. நமது செயல்திறன் அதிகமாகும்
3. செய்ய வேண்டிய செயல்பாடுகள் முன்னுரிமைப் படுத்தப்பட்டு செயலாக்கம் பெறும்
4. சுத்தமாக ஆரோக்கியமாக வாழ இயலும்
5. நாம் பயன்படுத்தும் பொருட்களின் பயன்பாடு அதிகமாகும்
6. மன அழுத்தம் குறையும்
7. பணச் சேமிப்பு சாத்தியமாகும்
8. இயற்கைவளம் பெருகும்
9. தெளிந்த சிந்தனை நம்மில் உருவாகும்
10. சிறப்பான உறவுகள் உருவாகும்

**இளையோரே! எப்படி...
இன்றே துவங்கலாமே
நமது நேர்த்தியான செயல்பாடுகளை...**




# மார்ட்டின் லூதர் கிங் (இளையவர்)

**எனக்கொரு கனவு உண்டு** என்ற புகழ்பெற்ற சொற்பொழிவு மூலம் உலகம் முழுவதும் அறியப்பட்டவர் மார்ட்டின் லுத்தர் கிங் (இளையவர்). **அவரது கனவு சமூக மாற்றத்திற்கானது.** காலம் காலமாக அடிமைகளாக எண்ணிலடங்கா துன்பத்திற்கு ஆளான அமெரிக்க கருப்பு இன மக்களின் சுதந்திர வேட்கையின் வெளிப்பாடுதான் அந்த சொற்பொழிவு. 1963-இல் வேலையும் சுதந்திரமும் வேண்டி வாஷிங்டனுக்கு புறப்பட்ட மிகப்பெரிய பேரணியில் அவர் ஆற்றிய **எனக்கொரு கனவு உண்டு** என்கின்ற சொற்பொழிவு அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. அக்டோபர் 14, 1964ஆம் ஆண்டில் வன்முறையற்ற வகையில் நிறவெறிக்கு எதிராக பாடுபட்டதற்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**இளமை:** மார்ட்டின் லூதர் கிங் 1929, ஜனவரி 15ஆம் நாள் அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் பிறந்தார். இவருடைய தந்தை மார்டின் லூதர். தாயார் அல்பெர்டா ஆவார். இவருடைய சட்டப்படியான பிறப்புப் பெயர் மைக்கேல் கிங் என்பதாகும்.

**கொள்கைகள்:** கிறித்துவ போதகராக இறைபணியை சிறப்பாக மேற்கொண்டவர் மார்ட்டின் லூதர் கிங். இதில் அவருக்கென ஒரு தனி செல்வாக்கு இருந்தது. கிறிஸ்துவத்தின் பொன்விதியான "உன் அயலாரையும் உன்னைப்போல் நேசி" என்ற கொள்கையின் அடிப்படையிலேயே அவர் ஆற்றும் சொற்பொழிவுகள் அமைந்தன. இயேசு ஆற்றிய மலைப்பொழிவு "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு" என்ற கொள்கை அடிப்படையிலும், "உங்களுடைய வாளை அதற்குரிய உறையில் போடு" என்பதனின் அடிப்படையிலும் இவருடைய வன்முறையற்ற அறக்கருத்துக்கள் இருந்தன.

1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'அமெரிக்கச் சேவை நண்பர்கள்' குழுவினருடன் இந்தியாவுக்கு வந்தார். இந்த இந்தியப் பயணம் மார்ட்டின் லூதரை மிகவும் ஆழமாக பாதித்து. வன்முறையற்ற எதிர்ப்பின் மூலம் அமெரிக்க கருப்பர்களுக்கு சுதந்திரம் கிடைத்திடத் தன்னை அர்ப்பணிக்கவேண்டும் என்கின்ற புரிதல் இங்கு ஏற்பட்டது. இந்தியாவில் தனது கடைசி மாலைப் பொழுதில் ஒரு வானொலி உரையின்போது, "அறப்போராட்டம் என்பதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்துள்ள ஒரு வலிமையான ஆயுதமாகும். நீதி மற்றும் கண்ணியமான போராட்டத்திற்கு பொருள் தரக்கூடியதாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

காந்தியும்கூட கிறிஸ்துவ எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய **கடவுளின் அரசு உங்களுடன் இருக்கிறது** (The Kingdom of God is within you) என்ற நூலில் கூறப்பட்ட வன்முறையற்ற எதிர்ப்பு என்ற

கருத்துக்களால் ஈர்க்கப்பட்டுள்ளார். இதையொட்டியே மார்ட்டின் லூதர் கிங் அவர்களும் டால்ஸ்டாயின் நூல்களை வாசித்தார். 1959-இல் டால்ஸ்டாயின் போரும் அமைதியும் என்ற நூலை மார்ட்டின் லூதர் கிங் மேற்கொள் காட்டியுள்ளார். டால்ஸ்டாய், காந்தி, மார்ட்டின் லூதர் கிங் ஆகிய மூவருமே இயேசுவின் வன்முறையற்ற எதிர்ப்பு என்ற ஆயுதத்தை கைக்கொண்டனர்.



**சாதனை:** மார்ட்டின் லூதர் கிங்கினுடைய போராட்டத்தின் பலனாக 1965-ஆம் ஆண்டு கருப்பினத்தவர்களுக்கு ஓட்டுரிமை அளித்தது அமெரிக்க அரசாங்கம். அதனைத் தொடர்ந்து கருப்பினத்தவர்களும் வெள்ளை இனத்தவர்களும் சமம் என்பதைப் பிரகடனப்படுத்தும் மனித உரிமைச் சட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றியது. கருப்பினத்தவர்களுக்கு சம உரிமை பெற்றுத் தரும் இயக்கத்தில் கருப்பினத்தவர்கள் மட்டுமே இடம் பெற்றால் பலன் இருக்காது என்று நம்பிய மார்ட்டின் லூதர் கிங் பிற இனத்தவரையும் தனது இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார்.

அனைவருடைய மனங்களும் மாறினால் தான் சம உரிமைக்கு வாய்ப்பு உண்டு என அவர் நம்பினார்.

**படுகொலை:** டென்னசியில் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் நாள் மாலை சொற்பொழிவிற்காக ஒரு விடுதியில் தங்கியிருந்த பொழுது ஒரு வெள்ளையினத் தீவிரவாதி லூதர் கிங்கை துப்பாக்கியால் சுட்டான். அந்த இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது 39.

மார்ட்டின் லூதர் கிங்கின் மறைவுக்கு உலகமே அஞ்சலி செலுத்தியது. அவரை கருப்பு காந்தி என்றும் அழைத்தது. மார்ட்டின் லூதர் கிங் நினைவாக அமெரிக்காவில் ஜனவரி மாதத்தின் மூன்றாவது திங்கட் கிழமை மார்ட்டின் லூதர் கிங் தினம் அனுசரிக்கப்பட்டு அமெரிக்கா முழுவதும் அன்று விடுமுறை நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

அன்று அவர் கண்ட கனவின் விளைவுதான் அவர் இறந்து 50 ஆண்டுகளுக்குள்ளாக கருப்பினத்தவர் ஒருவர் (பாரக் ஒபாமா) இருமுறை அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்து வருகின்றார்.

## மார்ட்டின் லூதர் கிங்கின் முக்கிய மேற்கோள்கள்

1. கல்வி ஒருவரை ஆழமாகவும் (intensively) , விமர்சன கண்ணோட்டத்தோடும் (critically) சிந்திக்கத் தூண்டுவதாக அமைய வேண்டும்.

   **அறிவுத் திறம் + குணம் = கல்வியின் நோக்கம்**

2. அன்புதான் எதிரியையும் நண்பனாக மாற்றும் ஒரே சக்தி.
3. வாழ்வின் உறுதியான, அவசரமான, சவாலானக் கேள்வி என்னவென்றால், நாம் பிறருக்காக என்ன செய்கின்றோம்? என்பதேயாகும்.
4. மாடிப் படிக்கட்டை நம் கண்ணால் முழுவதுமாக பார்க்க முடியாவிட்டாலும் முதல் படியினை எடுத்து வைப்பதுதான் நம்பிக்கை.
5. அன்பு செய்வதாகவே நான் முடிவெடுத்துள்ளேன். வெறுப்பு என்பது மிகப்பெரிய சுமை.
6. இருள் இருளை அகற்ற இயலாது. வெளிச்சம்தான் இருளை அகற்ற முடியும். அதுபோல் வெறுப்பு வெறுப்பை நீக்க இயலாது. அன்பு மட்டும்தான் வெறுப்பை அகற்ற இயலும்.
7. நாம் வரலாற்றை உருவாக்குவதில்லை, மாறாக வரலாற்றால் உருவாக்கப்படுகின்றோம்.
8. மனிதனை அளந்திடும் அளவுகோல், சௌகரியமான தருணத்திலும் சுகமான சூழலில் எப்படி இருந்தான் என்பது அல்ல; மாறாக சவாலான நேரத்திலும் சர்ச்சையான நேரத்திலும் எவ்வாறு இருந்தான் என்பதே.
9. மனித மேம்பாடு தானாக நடப்பதில்லை. நீதியான வாழ்வு நோக்கிய பயணம் அர்ப்பணங்களும், போராட்டங்களும், துன்பங்களும் நிறைந்தது. தனிப்பட்ட மனிதர்களின் தளராத முயற்சியாலும் உணர்ச்சிகரமான அர்ப்பணத்தாலுமே மனித மேம்பாடு சாத்தியமாகின்றது.
10. மனமார்ந்த அறியாமையும், தெளிந்த முட்டாள்தனமுமே உலகில் மிகவும் ஆபத்தானவைகள்.


நன்றி: **விக்கிப்பீடியா**



ஒருவருடைய தவறை சுட்டிக்காட்டு, ஆனால் குத்திக் காட்டாதே. தவறுகளை திருத்திவிடலாம், ஆனால் உன் சொற்களால் ஏற்பட்ட காயத்திற்கு மருந்திட முடியாது.

# சரோஜினி நாயுடு

சரோஜினி நாயுடு அவர்கள், ஒரு புகழ்பெற்ற கவிஞர். பிரபலமான சுதந்திர போராட்ட வீரர் மற்றும் அவரது காலத்தில் சிறந்த பேச்சாளர்களுள் ஒருவராவார். இவர் பாரதிய கோகிலா என்றும், இந்தியாவின் நைட்டிங்கேல் என்றும் எல்லோராலும் அழைக்கப்படுகிறார். இந்திய தேசிய காங்கிரஸின் முதல் பெண் தலைவராகவும், இந்தியாவின் (உத்தரப்பிரதேச மாநிலத்தின்) முதல் பெண் மாநில ஆளுநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடையப் பிறந்த நாளே, மகளிர் தினமாக இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்களுள் ஒருவர்.




**பிறப்பு** : பிப்ரவரி 13, 1879

**பிறப்பிடம்** : ஹைதராபாத்

**இறப்பு** : மார்ச் 2, 1949

**தொழில்** : கவிஞர், எழுத்தாளர், சமூக ஆர்வலர், பேச்சாளர், ஆளுநர்

**பிறப்பு:** சரோஜினி நாயுடு அவர்கள், ஹைதராபத்தில், ஒரு பெங்காலி இந்து குலின் பிராமணர் குடும்பத்தில் பிப்ரவரி 13, 1879 அன்று பிறந்தார். அவரது தந்தை அகோரநாத் சட்டோபாத்யாயா ஒரு விஞ்ஞானி, கல்வியாளர் மற்றும் தத்துவ ஞானி ஆவார். அவர் ஹைதராபாத்திலுள்ள நிஜாம் கல்லூரியின் நிறுவனராவார். சரோஜினி நாயுடு அவர்களின் தாயார் பரத சுந்தரி தேவி ஒரு பெண் கவிஞர். மேலும் அவர் பெங்காலியில் பல கவிதைகள் எழுதியிருக்கிறார். எட்டு உடன்பிறப்புகளில் மூத்தவராகப் பிறந்தார் சரோஜினி நாயுடு அவர்கள். அவரது சகோதரர்களுள் ஒருவரான பிரேந்திரநாத் ஒரு புரட்சியாளர். அவரது மற்றொரு சகோதரரான ஹரிந்திரநாத் ஒரு கவிஞர், நாடகக் கலைஞர் மற்றும் நடிகர் ஆவார்.

**ஆரம்பகால கல்வி:** சரோஜினி நாயுடு அவர்கள், இளமையிலிருந்தே ஒரு அறிவுக்கூர்மை மிக்க மாணவியாக இருந்தார். அவர் உருது, தெலுங்கு, ஆங்கிலம், பெங்காலி மற்றும் பாரசீக மொழிகளில் கைதேர்ந்தவராக திகழ்ந்தார். அவர் தனது பன்னிரெண்டு வயதில், சென்னை பல்கலைக் கழகத்தின் மெட்ரிக் தேர்வில் முதலிடத்தில் தேர்ச்சிப் பெற்று தேசிய புகழ்பெற்றார். அவரது தந்தை அவரை ஒரு கணித மேதையாகவோ அல்லது ஒரு விஞ்ஞானியாகவோ ஆக்க விரும்பினார். ஆனால் சரோஜினி நாயுடு அவர்களுக்குக் கவிதை எழுதுவதில் அதிக ஆர்வம் இருந்தது. ஆகவே, அவர் ஆங்கிலக் கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

**கவிதைகள் மீது பற்று:** சரோஜினி நாயுடு அவர்கள், தனது படிப்பில் சிறிது இடைவெளி விட்டு, பல்வேறு புத்தகங்களைப் படித்தார். பல கவிதைகள் எழுதிய அவரின் படைப்புகளால் ஈர்க்கப்பட்ட ஹைதராபாத் நிஜாம், வெளிநாடு

சென்று அவர் படிக்க உதவித் தொகையும் வழங்கினார். தனது 16வது வயதில், அவர் இங்கிலாந்து சென்று, லண்டனிலுள்ள கிங் கல்லூரியில் படித்தார். பின்னர், கேம்பிரிட்ஜிலுள்ள கிர்டன் கல்லூரியில் கல்வி பயின்றார். அங்கு அவர், அவரது சமகால புகழ்பெற்ற மேதைகளான ஆர்தர் சைமன் என்பவரையும், எட்மண்ட் காஸ் என்பவரையும் சந்தித்தார். காஸ் அவர்கள் சரோஜினி நாயுடு அவர்களின் கவிதைகளில் இந்தியாவின் கருப்பொருளான – பெரிய மலைகள், ஆறுகள், கோயில்கள், சமூகச் சூழல் போன்றவற்றை ஒட்டியே எழுதுமாறு அவருக்கு அறிவுரைக் கூறினார். அவர் தற்கால இந்திய வாழ்க்கை மற்றும் நிகழ்வுகளைத் தனது கவிதைகளில் சித்தரித்தார். சரோஜினி நாயுடு அவர்களுடைய படைப்புகளான தி கோல்டன் த்ரேஷோல்டு (1905), தி பார்ட் ஆஃப் டைம் (1912) மற்றும் தி ப்ரோகேன்விங் (1912) இந்திய மற்றும் ஆங்கில வாசகர்களை ஈர்த்தது.

**காதல் மற்றும் இல்லற வாழ்க்கை:** சரோஜினி நாயுடு அவர்கள் தனது பதினைந்தாவது வயதில், டாக்டர் கோவிந்தராஜுலு நாயுடு என்பவரை சந்தித்தார். அவரைக் காதலிக்கவும் தொடங்கினார். தொழில் ரீதியாக ஒரு மருத்துவராக இருந்த அவர் ஒரு பிராமணர் அல்லாதவர். 19 வயதில் சரோஜினி நாயுடு அவர்கள் தனது படிப்பினை முடித்த பின்னர், உள் சாதி திருமணம் அனுமதிக்கப்படாத அந்த காலக்கட்டத்தில், அவர் டாக்டர் கோவிந்தராஜுலுவைத் திருமணம் செய்து கொண்டார். அது ஒரு புரட்சிகர நடவடிக்கையாக இருந்தாலும், சரோஜினியின் தந்தை அவரது முயற்சிக்கு முழுவதுமாக ஆதரவு தெரிவித்தார். சரோஜினி நாயுடு அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான மணவாழ்வு அமைந்தது. அதன் அடையாளமாக அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் ஜெயசூர்யா, பத்மஜ், ரந்தீர் மற்றும் லீலாமணி.

**இந்திய தேசிய இயக்கத்தில் சரோஜினியின் பங்கு :** 1905-ல் வங்கப் பிரிவினை எழுந்ததைத் தொடர்ந்து சரோஜினி நாயுடு அவர்கள் இந்திய தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். இதன் மூலமாக, அவருக்கு கோபால கிருஷ்ண கோகலே, ரபீந்திரநாத் தாகூர், முஹம்மது அலி ஜின்னா, அன்னி பெசன்ட் அம்மையார், சி.பி. ராமசுவாமி ஐயர், காந்திஜி மற்றும் ஜவஹர்லால் நேரு போன்ற முக்கிய தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. **அவர் இந்தியப் பெண்களை சமையறையிலிருந்து வெளியே கொண்டு வந்து, அவர்களை விழித்தெழச் செய்தார்.** பெண்களுக்கான உரிமைகள் கிடைக்கக் கோரி, அவர் நாட்டிலுள்ள பல்வேறு நகரங்களுக்கும், மாநிலங்களுக்கும் பயணம் மேற்கொண்டார். அவர் இந்தியப் பெண்களுக்கான சுயமரியாதையை, அவர்களுக்குள் மீண்டும் கொண்டு வந்தார்.

**சரோஜினி நாயுடு ஆற்றிய பணிகள்:** சரோஜினி நாயுடு அவர்கள் ஜுலை 1919 ஆம் ஆண்டு, இங்கிலாந்திற்காக ஹோம் ரூல் லீக்கின் தூதராக நியமிக்கப் பட்டார். ஜுலை 1920 இந்தியா திரும்பினார். 1919 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கம், விழிப்புணர்வு ஆவணங்களை வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானதாக கருதும் சட்டமான ரௌலட் சட்டத்தினை பிறப்பித்தது. இச்சட்டத்தை எதிர்த்து போராடும் விதமாக, மோகன் தாஸ் காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை துவக்கினார். இவ்வியக்கத்தில் பெண்கள் சார்பில் ஆதரவு தெரிவித்து, முதலில் இணைந்தவர் சரோஜினி நாயுடு அவர்கள்.

1924-ஆம் ஆண்டு கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸில் பங்கேற்ற இரண்டு இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுள் சரோஜினி நாயுடுவும் ஒருவர்.

சரோஜினி நாயுடு அவர்கள், 1925-ல் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் தலைவர் என்ற பெருமை அவரையே சேரும்.

1925-ல் சரோஜினி நாயுடு அவர்கள் கான்பூரில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸின் வருடாந்திரக் கூட்டத்தில் பங்கெற்றார். சட்டமறுப்பு இயக்கத்தில் ஒரு முக்கிய பங்காற்றிய சரோஜினி அவர்கள், காந்திஜி மற்றும் பிற தலைவர்களுடன் கைது செய்யப்பட்டார். பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட அவர், காந்திஜியுடன் ஜனவரி, 31 1931-ம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்டார். பின் 1942-ல் நடந்த வெள்ளையனே வெளியேறு இந்தியா இயக்கத்தின் போது சரோஜினி நாயுடு அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டார். காந்திஜியுடன் 21 மாதங்கள் சிறையில் இருந்தார். சிறையில் இருந்தபோது அவருக்கு, காந்திஜியுடன் ஒரு அன்பான சகோதர உறவு ஏற்பட்டதால், காந்திஜி அவரை செல்லமாக ‘மிக்கி மவுஸ்’ என்றே அழைத்தார்.

ஆகஸ்ட் 15, 1947-ல் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த பின்னர், சரோஜினி நாயுடு அவர்கள் உத்தர பிரதேச ஆளுநர் ஆனார். இவர் சுந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னர் என்ற பெருமையைத் தட்டிச் சென்ற இந்தியப் பெண்மணி ஆவார்.

**இறப்பு :** சரோஜினி நாயுடு அவர்கள் மார்ச் 2, 1949 ஆம் ஆண்டில் மாரடைப்பால் தனது அலுவலகத்திலேயே இறந்தார்.

***Courtesy:****http://www.itstamil.com*



கோபம் என்னும் கொடிய அமிலமானது, அது எறிப்படும் இடத்தைவிட அதை வைத்துக்கொள்ளும் கரத்தையே பெரிதும் நாசப்படுத்தும் ◆கிளாவுண்டல்

# Song of a DREAM

***Once in the dream of a night I stood***
***Lone in the light of a magical wood***
***Soul-deep in visions that poppy-like sprang***
***And spirits of Truth were the birds that sang***
***And spirits of Love were the stars that glowed***
***And spirits of Peace were the steams that flowerd***
***In that magical wood in the land of sleep.***

***Lone in the light of that magical grove,***
***I felt the stars of the spirits of Love***
***Gather and gleam round my delicate youth***
***And I heard the song of the spirits of Truth***
***To quench my longing I bent me low***
***By the steams of the spirits of Peace that flow***
***In that magical wood in the land of sleep.***

***- Sarojini Naidu***

# ஐந்தாம் வகுப்பு மாணவியின் சமூகப் பொறுப்பு

கரூர், பரணி வித்யாலயா பள்ளியில் 5-ம் வகுப்பு படிக்கும் மாணவி கே.ஆர். ரக்ஷனா-வின் முயற்சியால் ஐம்பது ஆயிரம் பேர் கண்தானப் பதிவு செய்யும் திட்டம் தொடங்கியுள்ளது.

**உலகில் பார்வையற்றோரின் எண்ணிக்கையில் இந்தியாவில் மட்டும் 25 சதவீதம் பேர் இருக்கின்றனர். ஆகையால் இன்னும் 5 வருடத்தில் பார்வை இல்லாதவர்களே இல்லை என்கின்ற நிலையை உருவாக்கிட இத்திட்டத்தை உருவாக்கியுள்ளேன் - கே.ஆர். ரக்ஷனா.**



**இளையோரே... சமூகப் பொறுப்பு ஏற்றிடுங்கள் உங்களால் சமூகம் ஏற்றம் பெறட்டும்...!**

# திரைப்பட விமர்சனம்



# அப்பா



பீனா

சமீபத்தில் பார்த்த பெரிய பட்ஜெட் படங்களை எல்லாம் தூக்கி விழுங்கி விட்டது பி. சமுத்திரக் கனி அவர்களின் அப்பா திரைப்படம். இந்தியாவை, குறிப்பாகத் தமிழகத்தை பிடித்து ஆட்டுகின்ற மிக முக்கியமான பிரச்சனையை கையில் எடுத்திருக்கின்றார் சமுத்திரக்கனி. வயிற்றில் குழந்தை கருத்தரிக்கும் முன்பே அக்குழந்தைக்கு PRE-KG-யில் அட்மிஷன் போடுகின்ற அவலம்; அப்பா–அம்மா என்ன படித்திருக்கின்றார்கள் – என்கின்ற கேள்வியுடன் ஆரம்பமாகும் அட்மிஷன் – இன்டர்வியூக்கள்; நாங்கள் கொடுக்கும் உணவைதான் உண்ண வேண்டும் என்கின்ற கட்டாயங்கள் – இன்றைய கல்விச் சூழல்.

அதனுடைய கோரம் என்னவென்றால் பெற்றோர்களுக்கும் இத்தகைய கல்வி முறை பிடித்துப் போனதுதான். இத்தகைய கல்வி முறையோடு இணைந்த பிள்ளை வளர்ப்பு எத்தகைய கோரமானது என்பதை மூன்று கதாபாத்திரங்களைக் கொண்டு தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

'சமூகத்தை நேசிப்பவனாக நீ வளரணும்' என்று சொல்லி வளர்க்கும் ஓர் அப்பா.

'மகனுக்காகவே, கனவு கண்டு – படிப்பை தவிர வேறேதும் கூடாது' என நினைக்கும் ஓர் அப்பா.

'நமக்கென்ன என ஒதுங்கி நிற்கும்' இன்னொரு அப்பா.

பாத்திரங்களின் தேர்வும் நடிப்பும் பிரமாதம். மகனை தட்டிக் கொடுத்து வளர்க்கும் விதத்திலும், மகனின் பிறபால் ஈர்ப்பை புரிந்து கொண்டு அத்தகைய உறவை மதிக்க சொல்லிக் கொடுக்கும் விதத்திலும், இளையோருக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளைத் தட்டிக் கொடுத்து வெளிக் கொணரும் விதத்திலும் – நடிப்பாலும் திரைக்கதை வசனத்தாலும் உயர்ந்து நிற்கின்றார் சமுத்திரக் கனி.

பிள்ளைகளைப் பெற்றோர்கள் நண்பர்களாகப் பார்க்கும்போது, பிள்ளைகளோடு நேரம் செலவழிக்கும் போது, பிள்ளைகள் திறமையானவர்களாக, சமூக அக்கறை யுள்ளவர்களாக, **பிறபாலின** புரிதல் உள்ளவர்களாக, அதற்கும் மேலாக சந்தோஷமாக வாழ்கின்றார்கள்.

பள்ளியில் படிப்பு என்கின்ற போர்வையில் நடக்கும் கொடுமைகளை அழகாக தோலுரித்துள்ளார். இருப்பினும் அந்த மாணவனின் தற்கொலை – நிகழ்வைத் தவிர்த்திருக்கலாம். பெற்றோர் புரிந்து கொள்ளவில்லை எனினும் நண்பர்கள் உள்ளனர் – என்கின்ற கருத்தை விதைத்திருக்கலாம்.

பெற்றோர்கள் அனைவரும் பார்க்க வேண்டிய படம். பள்ளிகளில் இப்படத்தை திரையிடலாம்.



# தம்பி தங்கைகளே! தலைமை ஏற்க வாருங்கள்!

# மாறுவோம் மாற்றுவோம் நம் கிராமங்களை!

முனைவர். க. பழனித்துரை

இந்தியா சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆகிவிட்டன. நம் அனைத்து கிராமங்களும், கிராம மக்கள் அமைதியாக, மகிழ்ச்சியாக, சமத்துவத்துடன் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்வதற்கான அடிப்படையான வசதிகளை உருவாக்கி நம் மத்திய மாநில அரசுகள் தந்துவிட்டனவா என்று கேட்டால், 'ஆம்' என்று உறுதியாக பதில் தர இயலாது. அதற்காக அரசாங்கம் செயல்படவில்லை என்று நாம் கூற முடியாது. அரசாங்கம் செயல்பட்டது, அரசாங்கத்தை யார் கூர்ந்து கவனித்தார்களோ, யார் கண்காணித்தார்களோ, அவர்கள் அனைவரும் மேம்பட்டுவிட்டனர் என்பதை நாம் மறுக்க இயலாது.

கிராம மேம்பாட்டிற்காக ஒதுக்கிய நிதி மிக அதிகம். போடப்பட்ட திட்டங்கள் இரண்டாயிரத்தைக் கடந்து விட்டது உலக வங்கியின் அறிக்கையின்படி. ஆனால் அவ்வசதிகள் அனைத்தும் அனைவருக்கும் போய்ச் சேரவில்லை என்பதுதான் அனைவரின் ஆதங்கமும். பலர் ஒதுக்கப்பட்டனர், சிலர் ஒடுக்கப்பட்டனர், பலர் ஒதுங்கிக் கொண்டனர். இவர்களை அரசாங்கம் உள்வாங்கி மேம்படுத்த முடியவில்லை.

இன்றைய சூழலில் கிராமங்கள் என்பது வஞ்சிக்கப்பட்டதாகவே தோன்றுகிறது. நகரம் வளர்வது கிராமத்தைச் சுரண்டி என்பதை மகாத்மா காந்தி விளக்கினார். நூறு ஆண்டுகளுக்கு முன்பு. நகரங்கள் அசுர வளர்ச்சி பெறுவது கிராமங்களைச் சுரண்டி என்பது எத்தனைப் பேருக்கு தெரிகிறது. அரசாங்கங்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அதன் விளைவுகள் என்பது யார் அதைக் கண்காணிக்கின்றார்களோ அவர்களுக்குச் சென்றடைகின்றன.

கிராமத்தில் உள்ள மக்கள் அரசாங்கத்தை தங்கள் தலையிலே சுமந்த வண்ணம் இருக்கின்றனர். ஏனென்றால் அவர்களால் அரசாங்கத்தை வேலை வாங்க முடியவில்லை. மாறாக அரசாங்கம் அவர்களிடம் வேலை வாங்கி விடுகிறது. மக்கள் அரசாங்கத்தின் பிடியில் உள்ளனர். அரசாங்கம் மக்கள் பிடியில் இல்லை.

எனவே மத்திய மாநில அரசுகள் 37 துறைகள் மூலம் மக்களுக்காக சேவைகள் செய்து கொண்டுள்ளன என்பதை அந்த அலுவலகங்கள் இருப்பதன் மூலம் தெரிந்து கொள்கிறோம். அது பணி செய்கிறதா என்பதை மக்களால் தணிக்கை செய்ய முடியவில்லை. தோராயமாக ஒரு கிராம பஞ்சாயத்திற்கு ஒரு 7 கோடி ரூபாய் மத்திய மாநில அரசுத் திட்டங்கள் மூலம் ஒரு ஐந்தாண்டு காலத்தில் செலவழிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிக்கைகளை பார்த்தால் நாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அந்த முழு தொகை மக்களுக்கு வந்து சேர்ந்ததா என்பதை எவராலும் உறுதி செய்ய முடியாது. இந்தியாவில் அரசாங்கத்திலிருந்து, எந்தத் துறையிலிருந்து, எப்போது, யாருக்காக, எதற்காக, எந்த அதிகாரி மூலம் நிதி வருகிறது. அந்த நிதி எப்படி கிராமங்களில் செலவழிக்கப்படுகிறது என்பதை கண்டுபிடிப்பதே பெரிய கண்டுபிடிப்பு. இதுதான் இந்திய அரசியல் புதிர், அரசாங்கப் புதிர், வளர்ச்சிப் புதிர், ஆட்சிப் புதிர், ஆளுகைப் புதிர். இதைத்தான் ராஜீவ் காந்தி பாராளுமன்றத்தில் சொன்னார். டெல்லி ஒரு ரூபாயை கிராமத்திற்கு அனுப்பினால்



15 பைசா தான் கிராமத்திற்கு செல்லும் நிலை உள்ளது. அது மாற்றப்படல் வேண்டும். எனவே நம் குடிமக்களுக்கு கடமைப்பட்ட, பொறுப்புள்ள, பதில் சொல்லக்கூடிய நிலையில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், ஒரு அமைப்பின் மூலம் மக்கள் பக்கத்தில் இருக்க வேண்டும் என உள்ளாட்சியை அரசியல் சாசனச் சட்டத்தின் மூலம் உருவாக்கி ஒரு அரசாங்கத்தையே கட்டி எழுப்பி வைத்துள்ளனர். உள்ளாட்சி மூலம் மக்களை ஆளுகையிலும், மேம்பாட்டுச் செயல்பாடுகளிலும் பங்கேற்க வைக்க முயன்று முடிவெடுத்துள்ளனர்.

இந்த அமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற தலைவர்கள் கிராமத்தில் உள்ள தேவைகளை அறிந்து, அரசாங்கத்தின் திட்டங்கள் மூலமாக, அரசுத் துறைகள் உதவியுடன் மக்கள் பங்கேற்புடன் திட்டமிட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்து மக்களுக்கு ஒரு நல்லாட்சியை நாம் தந்திடலாம். இந்த உள்ளாட்சியில் கிராம அளவில் நடக்கும் தேர்தல் கட்சி சார்ந்தது அல்ல. எனவே ஒவ்வொரு ஆணும், பெண்ணும் நம் கிராமம் சிறப்பாக விளங்க வேண்டும் என்று கருதினால் நிச்சயமாக மக்களின் ஆதரவோடு கட்சி சார்பற்று செயல்பட்டு அனைத்து தரப்பு மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து சிறப்பான சேவையை செய்து, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குட்டி மகாத்மாவாக நாம் மாறி ஒரு குட்டி குடியரசை உருவாக்கி விடலாம்.

கிராம ஊராட்சிக்குள் செல்லும் ஒவ்வொருவரும் ஆளுகை தெரிந்தவராக, நிர்வாகம் தெரிந்தவராக, மக்களுடன் பணி செய்வது எப்படி என்பதைத் தெரிந்தவராக இருந்தால் அரசுத் துறைகள் நாம் சொல்வதைக் கேட்டுப் பணிகள் செய்யும். இன்று அரசுத் துறை அதிகாரிகளும் அலுவர்களும் சொல்வதைக் கேட்டு தலைவர்களாக இருக்க வேண்டியவர்கள் ஒப்பந்தக்காரர்களாக இருக்கின்றார்கள்.

இனிமேல் இந்த நிலை தொடர நாம் அனுமதிக்கக் கூடாது. அரசு தரும் நிதி நம் மக்கள் பணம். இதை நாம் கண்காணித்து பயன்படுத்திக் கொள்ள நம் நிர்வாகத்தை நாம் நடத்தத் தயாராக வேண்டும். அதற்குத் தேவை சுயநலமற்ற, தியாக மனோபாவம் கொண்ட, திறமை வாய்ந்த, பண்புள்ள, பக்குவம் பெற்ற, துணிவுள்ள இளைஞர்கள். இவர்கள் அனைவரும் தேர்தலுக்கானவர்கள் அல்ல. சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வர வல்லமை படைத்த மாற்றுத் தலைவர்கள். இவர்கள் அனைவரும் தன்னை மாற்றிக் கொள்ள தயாரானவர்கள். தன்னை மாற்றிக் கொண்டு கிராமத்தை மாற்றிட மக்களும் சேர்ந்து போராடத் தகுதி படைத்தவர்கள். இவர்களுக்கு வருகின்ற அக்டோபர் உள்ளாட்சித் தேர்தல் ஒரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறது. அதிக வாய்ப்பை பெண்கள் பெறுகின்றார்கள். அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் தயாராகிவிட்டால் ஊழலற்ற ஒரு உள்ளாட்சி அமைப்பை உருவாக்கி விடலாம்.



இதற்குத் தேவை ஒரு தலைவருக்கான பயிற்சி. அந்தப் பயிற்சி என்பது தலைமைத்துவ பயிற்சி. தன்னை மாற்றிக் கொள்ள முதல் பயிற்சி. அதன் பிறகு ஆளுகைப் பயிற்சி, அதன் பிறகு நிர்வாகப் பயிற்சி. இந்த மூன்றும் பெற்றுவிட்டால் மக்கள் முன் நாம் நம்மை இழந்து மக்களோடு சேர்ந்து பணி செய்யும் மக்கள் தலைவராக உருவாக முடியும். ஆனால் இன்றைய சூழலில் இது ஒரு போராட்டம். எனவே ஒரு வளர்ச்சிக்கான, மேம்பாட்டிற்கான, அமைதிக்கான போராளியாக உருவாக எண்ணும் அனைவரும் உள்ளாட்சிக்குள் வாருங்கள். அதன் பிறகு எங்களைக் கேளுங்கள், உங்களை மாற்றிக் கொள்வதற்கான ஒரு தலைமைத்துவ பயிற்சியைத் தருகின்றோம். இதற்குத் தேவை தன்னை மக்களுக்காக இழக்கத் தயாராகும் இளைஞர்கள்.

**முயலுங்கள், முயன்றால் முடியும்.**




நீ சுமக்கின்ற நம்பிக்கை, நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.



# இளையோரின் சமூகப் பொறுப்பும் கடமையும்

இளையவன்

இந்தியா பன்முகம் கொண்ட நாடு. பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், இனங்கள் இணைந்து, இயைந்து வாழ்வது இந்தியாவில் மட்டும்தான். சமீப காலமாக இந்தியாவின் பன்முக வாழ்வு கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது.

- **பெருகி வரும் சாதியச் சண்டைகள்**
- **மொழி பிரச்சனைகள்**
- **இயற்கை வளப் பகிர்வின்மை**
- **பெண்ணுக்கு எதிரான வன்முறைகள்**
- **கொலை, கொள்கைகள்**

இவைகள் இந்தியாவின் அஸ்திவாரத்தையே அசைத்துவிடுமோ என எண்ணத் தோன்றுகின்றது. இன்றைய இந்திய மக்கள் தொகையில் 41 சதவீதத்தினர் 20 வயதிற்கு குறைவானவர்கள் (2011 மக்கட்தொகை கணக்கின்படி). அப்படியெனில் இந்தியா இளம் வயதினருக்கானது. இளையோர்களை மிகவும் சரியாக வழிநடத்த வேண்டிய பொறுப்புத் தலைவர்களுக்கு உள்ளது.

இளையோரை நன்னெறிப்படுத்த வேண்டியதில் மீடியாவுக்கும் திரைப்படங்களுக்கும் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. இளையோர்கள் தடம் தவறினால் இந்தியா கேள்விக்கு உள்ளாகி விடும். இளையோர்கள் சீரிய சிந்தனையுடனும் தெளிந்த குறிக்கோளுடனும் வாழ்ந்தால் இந்தியா வளம் பெறும்.

இந்தியருக்கான சமூகப் பொறுப்புகளும் கடமைகளும் பல உள்ளன.

இக்கட்டுரை 5 மிக முக்கியமான பொறுப்புகளை இளையோர்களுக்காக விளக்குகின்றது.

## 1 சாதி, இனம், மதம் கடந்த சிந்தனையுடன் உறவுகள் கொள்ளுதல்

- ★ இந்தியாவில் 3,000க்கும் அதிகமான சாதிகளும், 25,000க்கும் மேலான உட்சாதிகளும் உள்ளன.
- ★ 22 அதிகார மொழிகளும், 1652 பேச்சு மொழிகளும் உள்ளன.
- ★ பல்வேறு இனங்கள், மதங்களும் உள்ளன.

சாதியும் மொழியும் மதமும் நம்மை வேறுபடுத்தலாம். ஆனால் பிரிக்கக் கூடாது, எதிரியாக மாற்றக் கூடாது. இன்று என்றும் இல்லாத அளவிற்கு சாதீய மற்றும் மதக் கட்சிகளும், குழுக்களும் இந்தியாவில் செயல்பட்டு வருகின்றது. சாதிய பெயரால் உயர்வு தாழ்வு பாரட்டுவது அதிகரித்து வருகின்றது.

சாதீய, மத, இன கொடுமைகளுக்கு எதிரான சட்டங்கள் உள்ளன. ஆனால் இவைகளை ஊக்குவிக்கும் கட்சிகளுக்கோ, குழுக்களுக்கோ தடை விதிக்கப்படவில்லை.

பிரிவினை வாதத்திற்கு இளையோர் மிகவும் எளிதாக உள்ளாகி விடுகின்றனர். தலீத் மக்களுக்கு எதிரான வன்முறைகள் 19% அதிகரித்து உள்ளது.



விலகி நிற்பவன் வெல்லுவதில்லை...
வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை...

எதையாவது பற்றிக் கொண்டு வாழவேண்டும் என நினைக்கின்ற இளையோர்கள் சாதிய / இன / மத பிரிவினைவாத தலைவர்களை தலைவர்களாகப் பூஜிக்கும் நிலைமை அதிகரித்து வருகின்றது.

அனைவரும் சமம். அனைவரும் உணர்வு உள்ளவர்கள். யாரும் யாருக்கும் அடிமையில்லை. சாதி எப்படி நம்மை வேறுபடுத்துகின்றது – என இளையோர் கேள்வி கேட்க வேண்டும்.

இளையோர்கள் சாதி, மதம், இனம் தாண்டி உறவுகள் கொள்வதும், அத்தகைய உறவுகளை மதிப்பதும் இளையோரின் பொறுப்பும் கடமையுமாகும்.

## 2 ஆணும் பெண்ணும் சமம் என்று எண்ணி வளர்வது



உடல் கூறுகளில் ஆணும் பெண்ணும் வித்தியாசமாக இருந்தாலும், உணர்வுகளால், எண்ணங்களால், செய்ய முடிகின்ற செயல்களால் ஆணும் பெண்ணும் சமம்.

- ★ ஒவ்வொரு மூன்று நிமிடமும் பெண் ஒருவர் வன்முறைக்கு உள்ளாகின்றனர்
- ★ 2008-ல் வரதட்சணை கொடுமையால் இறந்தவர்கள் 8,172 பெண்கள்
- ★ கருவிலேயே பெண் சிசுவை அழிக்கும் கொடுமை
- ★ பெண் குழந்தை பிறந்தவுடனே அழிக்கும் ஈனச் செயல்
- ★ பெண்ணை கடத்துதல், விபச்சாரத்தில் தள்ளுதல்
- ★ பெண்ணின் உழைப்புக்கு உரிய அங்கீகாரம் அளிக்காதது, சம வேலைக்கு சம ஊதியம் கொடுக்காத நிலை
- ★ காதல் போர்வையில் முகத்தில் ஆசீட் வீசுவது

பெண்ணை வெறும் உடலாகவே, ஆணுக்காக படைக்கப்பட்டவளாகவே இந்த சமுதாயம் பார்த்து பழக்கப்பட்டு விட்டது. அதையே தன்னுடைய செயல்களால் இளைய சமூகத்தினருக்கு சொல்லிக் கொடுக்கின்றது மீடியாக்களும், திரைப்படங்களும். மதங்களும் இச்சிந்தனையை நியாயப்படுத்துகின்றது. பள்ளி, கல்லூரிகளிலேயே ஆணும் பெண்ணும் சமம் என்கின்ற சிந்தனைகள் ஊட்டப்பட வேண்டும், வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.




இளையோர்கள் பெண்களை புரிந்துக் கொள்வதோடு, ஆரோக்கியமான உறவுகள் கொள்வதும், அத்தகைய ஆரோக்கியமான சூழல் சமூகத்தில் உருவாக உழைப்பதும் இளையோர்களின் சமூகப் பொறுப்பும் கடமையுமாகும்.

## 3 இயற்கை வளங்களை உருவாக்கி பேணிக் காப்பது

நகரமயமாதல், மாறிப்போகும் காலநிலை, இயற்கை வளங்களை பற்றிய போதிய புரிதல் இன்மை ஆகிய காரணிகள் இயற்கை வளங்களை அழித்து வருகின்றது. பணநோக்கு கொண்ட நிறுவனங்கள் வளர்ச்சி என்கின்ற போர்வையில் இயற்கை வளங்களை சுரண்டுகின்றது, அழிக்கின்றது. அதே நேரத்தில் இதற்கு எதிராக போராட்டங்களும் அதிகரித்து வருகின்றது. இயற்கை வளங்களை முறையாகப் பேணாததால்


**- வறட்சி ஒருபுறம்**

**- வெள்ளம் இன்னொரு புறம்**

**- புயல், நிலநடுக்கம்**

ஆகியன தொடர்கதையாகி வருகின்றது.

இயற்கை வளங்களைப் பேணுவதில் இளையோருககு மிக முக்கியமான பொறுப்புள்ளது. குறிப்பாக:




★ நீர் நிலைகளை பற்றித் தெரிந்து கொள்வதும், அவைகளைப் பேணுதலும், தண்ணீரை முறையாக, அளவாகப் பயன்படுத்துதலும்


★ மரங்களை நட்டு வளர்த்தெடுப்பது, கிராமங்கள்தோறும் **மரம் வளர்க்கும் இயக்கங்களை** ஆரம்பிப்பது

★ மட்காத குப்பைகளை, குறிப்பாக பிளாஸ்டிக பைகளின் பயன்பாட்டைத் தவிர்ப்பது

★ தான் வாழும் இடங்களை சுத்தமாக பராமரிப்பது

★ நோய்களை பரப்பும் தெரு விலங்குகளை அதிகாரிகளுடன் சேர்ந்து அப்புறப்படுத்துவது

*இளையோர் நினைத்தால்தான்*
*இயற்கை மேம்படும்;*
*இயற்கை நமக்குக் கிடைத்த*
*அருமையான கொடை;*
*இயற்கை இன்றி நாம் இல்லை;*
*இயற்கையோடு இணைந்த*
*வாழ்வுதான் உன்னதமானது.*




## 4 தன்னை திறமையானவர்களாக வளர்த்தெடுக்கும் பொறுப்பும் கடமையும்




ஒவ்வொரு இளையோருக்கும் தன்னை திறமையுள்ளவர்களாக வளர்த்தெடுப்பது மிகவும் முக்கியம். இன்று இளையோர்கள் தாழ்வு மனப்பான்மையாலும், தவறாக வழிகாட்டுதலாலும் சிதைந்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

பள்ளிகள், கல்லூரிகள் அறிவையூட்டுகின்றன. ஆனால் எந்தளவிற்கு திறமையானவர்களாக இருக்கின்றார்கள் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இன்று அரசாங்கங்கள் இளையோரை திறமையானவர்களாக உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கீழ்குறிப்பிடப்படும் திறமைகள் அனைத்தும் இன்றைய இளையோர்களுக்கு அவசியம் தேவை.

★ மொழித் திறமை (தமிழ், ஆங்கிலம், இந்தி, மற்றும் ஏதாவது ஒரு வெளிநாட்டு மொழி)

★ தன்னைப் புரிந்து கொண்டு தன்னை வளர்த்தெடுக்கும் திறமை

★ தேவைப்படும் தகவல்களை திரட்டிப் பயன்படுத்தும் திறமை

★ கிடைத்திடும் வாய்ப்புகளின் பலனை அறிந்துப் பயன்படுத்தும் திறமை

★ இயற்கையோடு இணைந்து வாழும் திறமை

★ தன் சுத்தம், ஆரோக்கியம் பேணும் ஆற்றல்

★ பணத்தின் மதிப்பை அறிந்து சேமிக்கும் திறமை

★ உறவுகளை, குறிப்பாக பிற பாலினத்தை புரிந்து பழகிடும் திறமை


இளையோர்கள் தன்னைத்தானே திறமையானவர்களாகக் கட்டமைத்துக் கொள்ளும் மிகப்பெரிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.



எதிர்ப்பில்லாமல் வாழக் கற்றுக் கொள்கின்றேன்...
பல ஏமாற்றங்களை சந்தித்தபின்...

## 5 வாழும் சமூகத்தை சிறப்பாக செதுக்கிடுவது

நான் உண்டு, என் வீடு உண்டு, என் உறவுகள் உண்டு என்று வாழ்வது சிறப்பான வாழ்க்கையாக அமையாது. இளையோர் ஒவ்வொருவரிடமும் அபரிமிதமான திறமைகள், எண்ணங்கள், சீரிய சிந்தனைகள் புதைந்துக் கிடக்கின்றது. இளையோர் ஒவ்வொருவரும் தன்னைத் தாண்டி சிந்திக்கும், செயல்படும் குணம் உள்ளவர்கள். அது அவர்களுக்கு மிகவும் இயற்கையாகவே அமைந்துள்ளது.



ஆனால் அவர்களின் குடும்பங்களும் உறவுகளும் தன்னை மட்டுமே சுற்றி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள கற்றுக் கொடுக்கின்றன. அதற்காகவே அவர்களை கட்டாயப்படுத்துகின்றன.

ஆனால், இது **என் கிராமம்**
**என் பள்ளிக் கூடம்**
**என் கல்லூரி**
**என் நாடு** – என்கின்ற சிந்தனையோடு இளையோர்கள் வளரவேண்டியது காலத்தின் கட்டாயம். எண்ணங்கள் குறுகியவைகளாக அமைந்துவிடக் கூடாது. பரந்த எண்ணங்கள் இளையோரில் குடிகொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை வசந்தமாகும்.

**பிறருக்காக, சமூகத்திற்காக, நாட்டிற்காக அர்ப்பணிக்கின்ற போது, அதனுடைய வளர்ச்சிக்காக செயல்படும் போது உங்களுக்குக்ளே ஒரு பெருமிதம், கட்டுக்கடங்காத மகிழ்வு ஏற்படுவதை உங்களால் உணர முடியும். இதுதான் உந்து சக்தி.**

உங்கள் அர்ப்பணம் நீங்கள் வாழும் கிராமத்தில் இருந்து ஆரம்பமாகட்டும்.

- கிராமத்தை சுத்தமாக வையுங்கள்
- நீர் நிலைகளை பேணுங்கள்
- மரங்கள் நட்டு கிராமத்தை பசுமையாக்குங்கள்
- அனைத்து சிறாரும் இளையோரும் திறமை உடையவர்களாக திகழ்ந்திட உதவுங்கள்

18- வயது கடக்கும்போது, உங்களின் ஜனநாயகக் கடமை இன்னும் அதிகமாகின்றது. நேர்மையான, மக்கள் பால் ஆர்வமுள்ள, சிந்தனைத் திறனுமுள்ள தலைவர்களை தேர்ந்தெடுப்பது உங்கள் தலையான பொறுப்பாகின்றது.

இளம் வயது முதலே உங்கள் தலைமைப் பண்புகளை வளர்த்து வாருங்கள். மாற்றம் கொணருவீர்கள். மக்கள் உங்களை நேசிப்பார்கள். இளையோர்களுக்கான பொறுப்புகளையும், கடமைகளையும் பட்டியலிட்டு கொண்டே போகலாம். **மேற்கூறப்பட்ட பொறுப்புகளையும் கடமைகளையும் இளையோர்கள் புரிந்து கொண்டு செயல்படும்போது இளையோர் சக்தி ஆக்கப்பூர்வமான சக்தியாக உருப்பெறும். மாற்றங்கள் வசப்படும். ஆரோக்கியமான சமூகமாக நாம் அனைவரும் வாழ்வோம்.**

ஜெயித்துக் கொண்டே இரு..!!
நீ வளரும் வரை அல்ல..!!
உன்னை வெறுத்தவர்கள்...
உன்னை வாழ்த்தும் வரை..!!

### எண்ணம் போல் வாழ்வு



**விடா முயற்சி வெற்றியைத் தேடித் தரும்!**

**மிகச் சிறந்தவை கடின உழைப்பாலே வரும்!**

**உயர்வாகக் கருதினால் உயர்ந்திட முடியும்!**

**திறமைசாலி என நினைத்தால் திறமைசாலி ஆகலாம்!**

**மூச்சடக்கிக் காட்டினால்தான் முனியென ஏற்பார்கள்!**

உன் மீது உனக்கே நம்பிக்கை இல்லையென்றால்,
கடவுளே நேரில் வந்தாலும் பயனில்லை ◆ விவேகானந்தர்



# பண்டைய நகர நாகரிகம் சொல்லும் சமூகப் பொறுப்புகளும் கடமைகளும்

முனைவர். ராமஜெயம்

இந்தியாவின் நகர நாகரிகம் மிகவும் பழமையானது, முதன்மையானது. உலக நாகரிகங்கள் பலவற்றிற்கு நமது நகர நாகரிகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. நாம் இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கும் நகர வாழ்க்கை, அனுபவித்துக் கொண்டிருக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இவையெல்லாமே சிந்து சமவெளி நாகரிக காலத்தின் தொடர்ச்சி அல்லது நீட்சீ என்றேச் சொல்லலாம். அன்றைய நகர நாகரிகத்திற்கும், இன்றைய நகர நாகரிகத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. காரணம் அரசியல்மயப்படுத்தாத சிந்தனைப் போக்கு, பொருளாதார வழி வாழ்க்கை என்றே சொல்லலாம்.

ஐரோப்பிய நகர நாகரிகத்தின் மூலமாகத்தான் பல்வேறு புரட்சிகர அரசியல், சமூக சிந்தனையாளர்களான பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ஜான் வாக், ரூசோ, ஹாப்ஸ் போன்றவர்கள் இன்றைக்கும் நமது அரசியல், பொருளாதார, சமூக வாழ்வியல் கோட்பாடுகளுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்கிறார்கள். உலக நாகரிகத்தில் ஏதென்ஸ் நகரம் தான் – நகர நாகரிகத்தின் தலைமையிடம். அங்கிருந்து புறப்பட்ட புரட்சியாளர்கள், அறிவியல் சிந்தனையாளர்கள், அறிஞர்கள், உலகமெங்கும் மக்கள் வாழ்க்கையில் அன்றாடம் நிறைந்திருக்கிறார்கள்.

மைக்கேல் ஃபாரடே, தாமஸ் ஆல்வா எடிசன், கலிலியோ போன்ற முன்னனி அறிவியல் மேதைகள் அறிவியல் ரீதியான சிந்தனை போக்குதான் நகர நாகரிகத்தின் முதல்படி, அடையாளம் என்று முத்திரைப் பதித்தார்கள். அவர்களைத்தொடர்ந்து 18, 19ஆம் நூற்றாண்டில் வந்த பல்வேறு அறிஞர்களின் கண்டுபிடிப்புகள் உலக வரலாற்றை தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கிறது.

## உலக நகர நாகரிகத்தில் இந்தியாவின் பங்கு

பண்டைய உலக நாகரிகம் – நகரங்களை மையப்படுத்தி மட்டுமல்ல, கிராமப்புற வாழ்வியல் கோட்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளித்தது. பண்டைய நகரங்கள் அனைத்தும் ஆற்றங்கரையை, நீராதாரங்களை மையப்படுத்திய வாழ்க்கை என்பதை முக்கியமாக குறிப்பிட விரும்புகிறேன். காரணம் நீராதாரங்களை அடிப்படை வாழ்வாதாரமாகக் கொண்டு இயங்கிய சமூகம் இன்றைக்கு எப்படி நீராதாரங்களை அடுத்த தலைமுறை பயன்படுத்தி வாழ வழி செய்யாத அளவு சீரழிந்து வருகிறது என்பதை தற்போது சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவின் சிந்து சமவெளி நாகரிகம் – நகர நாகரிகத்தின் நவீன கட்டமைப்பின் எடுத்துக்காட்டு ஆகும். ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு நாகரிகங்களில் மக்களின் வாழ்க்கை முறை எவ்வளவு அழகாகவும், நேர்த்தியாகவும், முறையானதாகவும் இருந்தது என்பதை நமது வரலாற்று ஆய்வாளர்கள் திரும்பத் திரும்ப நினைவூட்டி நாகரிகத்தின் தோற்றுவாயைப் பாடிப் புகழ்ந்து பரவசமடைகிறார்கள். நாகரிகத்தின் தொட்டில் என்று அழைக்கப்படும் நைல் நதியை ஆதாரமாகக்கொண்ட எகிப்து நாட்டின் நாகரிகம் ஐரோப்பிய நாகரிகத்திற்கும் முதன்மையானது.

அறிவியல் சிந்தனை, அரசியல் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு, நவீனமயமாக்கலின் தொடக்கப் புள்ளியாக திகழ்ந்தது நகரநாகரிகம்.

நகர நாகரிகத்தின் முக்கிய கூறுபாடுகள் என்ன வென்றால்,



முயற்சி செய்யத் தயங்காதே...
முயலும்போது முட்களும் முத்தமிடும்...

1) விவாதங்கள் மூலம் அறிவியல், சமூக சிந்தனைகளை கூர்மைப்படுத்துவது

2) ஜனநாயக முறையிலான வாழ்க்கை, கருத்துரிமை களுக்கு மதிப்பளிப்பது

3) சமூக விடுதலைக்கு தனி மனித சுதந்திரத்தை அடிப்படையாக மாற்றுவது

4) கருத்துப் பரிமாற்றங்களால் சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது

5) கூட்டு வாழ்க்கையை வாழ்வியல் கோட்பாடாக வைத்து அனைவரின் தேவையையும் சரி சமமாக அறிந்து நிறைவேற்றுவது

6) சமூக மறுமலர்ச்சி, மாற்றம் என்பதை அறிவியல் சிந்தனையில் வரையறைக்குள் ஏற்படுத்துவது

7) இவற்றின் இறுதி கட்டமாகத்தான் பல்வேறு போராட்டங்களின் மூலம் நமக்குக் கிடைத்த தாரக மந்திரங்கள் – சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.

ஆனால் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் இன விடுதலை, சமூக விடுதலை, தனிமனித சுதந்திரம் என்று இருந்த விவாதங்கள், தொழிற் புரட்சிக்கு பிறகு, உலக சமூகம், தனி மனித வளர்ச்சி, பொருளாதாரம், உழைப்பு சுரண்டல், வசதி, பகட்டான வாழ்க்கை முறையை தெர்ந்தெடுத்து முதலாளித்துவத்துக்கு அடிமைப்பட்டு சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கி நகரம் என்பது பணக்கார, மேட்டுக்குடி, படித்த, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நுட்ப அறிவியலுக்கான ஒரு இடமாக உருவாகியுள்ளது. இன்றைக்கு நகர நாகரிகம் நச்சு கலந்த ஒரு வாழ்க்கை சூழலாக மாறி வருகிறது.

பண்டைய மற்றும் நவீன காலத்தின் நகர நாகரிகங்கள் உரிமைகளை (தனி மனித, சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, பண்பாட்டு, அறிவியல் சிந்தனை) ஊக்கப்படுத்தி, செயல்பாட்டுக்கு கொண்டு வந்து தனி மனித சுதந்திரம், சமூக விடுதலை, சமத்துவம் ஆகியவற்றை கல்விச் சாலைகள் மூலம் கற்பித்து, அறிவியல், சமூக சிந்தனைகளை அனைவரும் அடையும்படி செய்த ஒரு மாபெரும் புரட்சிகரமான இயக்கம்.

மன்னராட்சி, நிலப் பிரபுத்துவம், எதேச்சதிகாரம், ஏகாதிபத்தியம் என்று ஆட்சியாளர்கள் மக்களைச் சுரண்டிய, அடிமைத்தனத்தை எதிர்த்து கல்வி எனும் ஆயுதத்தைக் கொண்டு போரிட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்தது அன்றைய நகர நாகரிகம். மக்களாட்சி, குடியரசு, ஜனநாயகம்– இவையெல்லாம் நகர நாகரிகத்தின் மூலம் மனித குலம் வாழ்க்கைக்கு துணையாக வைத்தக் கொள்ள வாய்ப்புகளை தந்தது அன்றைய நகர நாகரிகம்.

## இன்றைய சூழலில் நகர நாகரிகம்

இன்றைய நகர நாகரிகம், வாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு என்பது மேலே சொல்லப்பட்ட அனைத்து செயல்பாடுகளுக்கும், கருத்துக்களுக்கும் முரண்பட்டதாகவும், சில சமயம் எதிர்மறையாகவும் இருப்பதாகவே கருதத் தோன்றுகிறது. தனிமனித சுதந்திரம் – இன்றைக்கு தவறாக புரிந்து கொள்ளப்பட்டு எதையும் தட்டிக் கேட்க இயலாத ஒரு உணர்வற்ற சூழலுக்குத் தள்ளியுள்ளது. கருத்து சுதந்திரம், உரிமைகளை தனக்கு சாதகமாக மட்டும் பயன்படுத்தி வரும் ஒரு சுயநலப் போக்கை தொடர்ந்து ஊக்குவிக்கும் பண்பாட்டு கலாச்சார பிரழ்வு ஏற்பட்டிருக்கிறது. சமூகக் குற்றங்களுக்கும், சுரண்டல்களை வளர்த்தெடுப்பதற்கும் சாலை அமைத்துக் கொடுக்கும் ஒரு சமூகமாக மாறிவிட்டது இன்றைய நகர நாகரிகம்.

இன்றைய இந்தியாவின் நகர வாழ்க்கை என்பது மனித குலத்தின் அடிப்படை நாகரிகத்திற்கு முற்றிலும் எதிரான ஒரு வாழ்க்கை சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. பிரமாண்ட கட்டிடங்களும், அகன்ற சாலைகளும், போக்குவரத்து வசதிகளும், மருத்துவம், கல்வி போன்றவற்றுக்கு நகரம் மட்டும் தான் உகந்தது என்று ஒரு உடைக்கமுடியாத ஒரு பிம்பத்தை ஏற்படுத்தி, கிராமம் – நகரம் என்னும் இடைவெளியை சுருக்க முடியாத அளவிற்கு நகரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

எல்லா வளர்ச்சித் திட்டங்களும் (கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம், தொழில்) அடிப்படை கட்டமைப்பு வசதிகள் என அனைத்தும் நகரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மற்ற உலக நாடுகளில் இருக்கும நகரங்களுக்கு இணையாக இந்தியாவில் நகரங்களின் கட்டமைப்பு இருக்கும் போதிலும் – சாதி, மதம், இனம், மொழி என்னும் வேறுபாட்டின் அடையாளங்கள் அடர்த்தியாக இருப்பதையும் அறியும்போது நகர வாழ்க்கை ஒரு அரிதாரப் பூச்சு என்றே சொல்ல முடியும். நகர நாகரிகத்தின் அடிப்படை சிந்தனைகள் பெயரளவில் கூட மாற்றத்தை ஏற்படுத்த முடியாத அளவுக்கு பின்தங்கி இருக்கிறது. இந்தியாவின் நகர நாகரிகம் – மதக் கலவரங்கள், இனக் கலவரங்கள், நதி நீர் பிரச்சனைகளுக்கும், மொழி பிரச்சனைகளுக்கும், புலம் பெயர்ந்த மக்களின் மீது தாக்குதல் நடத்துவதும் தான்.

வேலையில்லா பட்டாதரிகளின் சொர்க்க பூமியாகவும், அவர்களின் சமூக பொருளாதார குற்றங்களுக்கு

வழிகளாகவும் நகரங்கள் மாறி வருவது – தனி மனித அடிப்படை விடுதலை, சுதந்திரத்திற்கு முற்றிலும் எதிரானதாகவும், சட்டம் ஒழுங்குக்கு கட்டுப்படாத ஒரு கலாச்சாரத்தை பரப்பி அரசு என்னும் இயந்திரத்தை இயங்கவிடாமல் தடுக்கும் சக்தியாகவும் மாறி வருகிறது. நகரம் என்பது வளர்ச்சியின் குறியீடு என்று பார்க்கப்படுகிறது. அதே சமயம் சாக்கடை, கழிவுநீர், மாசு, சுகாதார சீர்கேடு, குடிசைப் பகுதிகள், தெருவோர பிச்சைக்காரர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியவை மறைக்க முடியாத நகர அடையாளங்களாக இருக்கிறது. இதற்கு அரசியல் நடவடிக்கைகள், அரசின் கொள்கைகள் மற்றும் சமூகத்தின் எதிர் வினைகள் எல்லாம் கலந்த ஒரு நாகரிக சறுக்கல் ஏற்பட்டிருக்கிறது. **எனவே நகர நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை மீட்டெடுக்க தனி மனித சுதந்திரத்தை போற்றும் அதே நேரத்தில் சமூக அக்கறை, பொறுப்பு, கவனம் ஆகியவற்றை கருத்தில் கொண்ட நாகரிகப் புரிதல் தேவை.**




## கனவு இதழின் சொந்தக்காரர்கள் இவர்கள்

## DREAM Quarterly Magazine - PATRONS 2016

| Sl. No. | Name | Place |
|---|---|---|
| 1 | Mr. Antony Balmin Jose G | Vattakarai, KK Dist |
| 2 | Mr. Antony Xavier M | Chettikulam, Nagarcoil, KK Dist |
| 3 | Mr. Arasan S. Ponnraj | Nagarcoil, KK Dist |
| 4 | Mr. Arun Prasath C | K K Nagar, Trichy |
| 5 | Mr. Benti Cruz A.S | Toronto, Canada |
| 6 | Mr. Britto J | Sagayanagar, KK Dist |
| 7 | Ms. Chandra | Nilakottai |
| 8 | Mr. Daniel Gunanidhi | Thiruvannamalai |
| 9 | Mr. Durai Raj M.P.K | Secretary, ROSED, Musari |
| 10 | Mr. Hamlet Moni D | Maravankudieruppu, KK Dist |
| 11 | Ms. Helen Viji | Palliyadi, KK Dist |
| 12 | Ms. Jasmine Rani K | Maravankudieruppu, KK Dist |
| 13 | Mr. Jerald M.S | Nagappattinam |
| 14 | Mr. John Bennet P | Nagarcoil, KK Dist |
| 15 | Mr. John Densingh C | Conam Palliadi, KK Dist |
| 16 | Ms. Joyce Justin T | Trichy |
| 17 | Mr. Knox JR | Maravankudieruppu, KK Dist |
| 18 | Fr. Leon Henson S | Christu Nagar, Nagercoil, KK Dist |
| 19 | Mr. Louis A Sahayam | Maravankudieruppu, KK Dist |
| 20 | M/s. Nila Studio | Palliady, KK Dist |
| 21 | Mr. Oswald Quintal | Ponmalaipatti, Trichy |
| 22 | Dr. Paul D.J | Kerala |
| 23 | Lr. Peter Sha L | Mel Ramanputhur, KK Dist |
| 24 | Mr. Prakash JK | Kurusadi, Nagercoil, KK Dist |
| 25 | Fr. Robinson J | Kuzhithurai Diocese, KK Dist |
| 26 | Ms. Selva Saroja | Palliyady, KK Dist |
| 27 | Ms. Shekina Evelin C | Cuddalore |
| 28 | St. Aloysius Hr. Sec. School | Christu Nagar, Nagercoil, KK Dist |
| 29 | Ms. Susannah Mary D | Maravankudieruppu, KK Dist |
| 30 | Mr. Thomaiyar. G | K.K. Nagar, Trichy |
| 31 | Mr. Thomas Xavier J.R | Maravankudieruppu, KK Dist |
| 32 | Ms. Vidhya Sagar. J | Thiruvannamalai |
| 33 | Ms. Vijila A.S | Mulagumoodu, KK Dist |

**கனவு இதழ் உங்களை நெஞ்சார வாழ்த்துகின்றது.**
**உங்களின்அர்ப்பணிப்பு அளவிடற்கரியது!**
**கடினமான உழைப்பிலிருந்து உதவுகின்றீர்கள்!**
**உங்களால் இளைய சமுதாயம் நிச்சயமாக மேன்மை பெறும்.**
**உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் நன்றிகள் பல...!**

எழுந்து நடந்தால் இமயமலையும் நமக்கு வழி கொடுக்கும்...
உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மை சிறைபிடிக்கும்...

VISIONS global empowerment india

## விஷன்ஸ் இந்தியா - ஓர் அறிமுகம்



விஷன் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா (விஷன்ஸ் இந்தியா) ஒரு சுயசார்புள்ள, தனித்துவமான, இலாப நோக்கமற்ற, தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகும். இந்நிறுவனமானது இந்திய தொண்டு நிறுவன சட்டங்களின்படி (பதிவு எண் 65/16) பதிவு செய்யப்பட்டுள்ளது.

- அர்த்தமும் முழுமையும் உடைய கல்வி சார்ந்த சேவைகளையும் வாய்ப்புகளையும் – வறுமையினாலும் ஊனத்தாலும் பிற இன்னல்களாலும் பாதிக்கப்பட்ட இளையோர்களுக்கு வழங்குதலும்
- அனைத்து தரப்பு மக்களின் முழுமையான வளர்ச்சிக்காக, நிலைத்த – நீடித்த – சீரிய சமூக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதும்
- மேம்பாடடைந்த, ஆரோக்கியமான சமூக உருவாக்குதலும்

**விஷன்ஸ் இந்தியாவின் தலையாய பணியாகும்.**

தற்போது, விஷன் இந்தியாவானது தமிழகத்தின் பல பகுதிகளில் வறுமையினால் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்த இளையோர் – முழுமையான கல்வியினைப் பெற்றிடவும், ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம், இளையோர் தலைமைத்துவம், வாழ்க்கைத் திறன்கள் போன்றவைகளில் மேம்படவும், உயர்கல்வி பயின்றிடவும் – வழிகாட்டுதல்களையும் வாய்ப்புகளையும் பொருளாதார உதவிகளையும் வழங்கி வருகின்றது.

## இளையோர் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம்

வாழ்க்கைத் திறன்கள் மேம்பாடும் இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுத்தலும் உலகின் பல நாடுகளில் பள்ளி / கல்லூரி கல்வியோடு அறிமுகப்படுத்தப்படவில்லை. இவை இரண்டும் வாழ்வின் கடைகோடியில் வாழும் இளையோருக்கு எட்டாத கனியாகவோ இருக்கின்றது. அர்த்தமுள்ள பயனுள்ள வாழ்வு வாழ்ந்திடவும், தனக்குள் இருக்கும் திறன்களுக்கு முழு வடிவம் கொடுத்திடவும், வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு கல்வியும், இளையோர் தலைமை வளர்த்தெடுத்தலும் இன்றியமையாததாக உள்ளது.

விஷன்ஸ் உருவாக்கியுள்ள பயிற்சி – பாடங்கள் ஈடுபாடுள்ள, அர்ப்பணமுள்ள, அறிவார்ந்த, சமூக அக்கறையுடைய இளையோரை உருவாக்குவதற்கு பெரிதும் உதவுகின்றது. தற்போது 26 கிராமங்களைச் சார்ந்த 900 இளையோருக்கு தலைமைத்துவ மற்றும் வாழ்க்கை திறன் கல்வியினை கற்றல் மற்றும் வலுபடுத்ததல் மையங்கள் வழங்கி வருகின்றது.

கிராமங்களில் உள்ள கற்றல் மற்றும் வலுப்படுத்துதல் மையங்கள் – இளையோர்கள் முதலில், தன்னுள் புதைந்து கிடக்கும் திறன்களை இனங்கண்டு வலுப்படுத்திடவும், இரண்டாவது அத்தகைய வாழ்க்கைத் திறன்களை, தலைமைப் பண்புகளை சமூகத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்திடவும், ஆக்கமும் ஊக்கமும் அர்ப்பணிப்புமுள்ள சமூகப் பணியாளர்களைக் கொண்டு வழங்கி வருகின்றது. ஒவ்வொருவரும் முழுமையான வாழ்வு வாழவும், தான் வாழ்கின்ற உலகினை ஒருபடி சிறப்பானதாக மாற்றிடவும் உரிமைக் கொண்டிருக்கின்றனர். இதை விஷன்ஸ் தன் பயிற்சிகளினால் இளையோர்களுக்கு வழங்கி வருகின்றது.

## ‘கனவு’ - இளையோர் இதழ்

விஷன்ஸ் இளையோர்களின் தலைமைத்துவ பண்புகளை வளர்த்தெடுப்பதின் இன்னொரு முயற்சியாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை கனவு இதழை அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகின்றது.

இவ்விதழ் தமிழகத்தின் முதல் முயற்சியாகும். கதைகள், கவிதைகள், அறிவு சார் கட்டுரைகள், உலக மற்றும் இந்திய தலைவர்களின் வாழ்க்கைப் பாடங்கள், கற்றல் மேம்பாட்டிற்கான விளையாட்டுகள், தனி மனித மேம்பாட்டு ஆலோசனைகள், உயர் கல்விக்கான வாய்ப்புகள் – போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது ‘**கனவு**’.



இளையோர்கள் தன்னுடைய திறன்களை வளர்த்தெடுத்து, அத்திறன்களை தன்னுடைய மற்றும் சமூக வளர்ச்சிக்காக அர்ப்பணித்திட உதவுவதும் வழிகாட்டுவதுமே இவ்விதழின் தலையாய நோக்கமாகும்.

இதுவரை ஐந்து வெளியீடுகள் வந்துள்ளன. இரண்டாயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு இளையோர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

'கனவு' இதழ் கீழ்காணும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

- தலைமைத்துவ மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாடு
- பாலியல் சமத்துவம், சுற்றுச்சூழல், சட்டங்கள், நிலைத்த விவசாயம், தகவல் தொழில்நுட்பம், உடல்நலம், சுகாதாரம், வேலைவாய்ப்புச் செய்திகள்
- உயர்கல்வி வழிகாட்டுதல்
- கல்வி உதவித் தொகை, கல்விக் கடன், அரசுத் திட்டங்கள்
- பயனுள்ள பேட்டிகள்
- கவிதைகள், பழமொழிகள்
- விளையாட்டுகள்
- சமூகப் பணிகள், சமூகக் கடமை
- உலக, இந்திய தலைவர்களின் வாழ்க்கைப் பாடங்கள்
- சாதித்த இளையோர்கள், ஆசிரியர்களின் வாழ்க்கைகள்
- ஆசிரியர் பக்கம்
- ஆசிரியருக்குக் கடிதம்




**முதல் இதழ்: செப்டம்பர் 2015**
**தலைமைத்துவம் அறிமுகம்**




**2ஆம் இதழ்: டிசம்பர் 2015**
**பள்ளிகளில் இளையோர் தலைமைத்துவம்**




**3ஆம் இதழ்: மார்ச் 2016**
**இயற்கை பேரழிவுகளின் போது இளையோர்களின் தலைமைத்துவம்**




**4ஆம் இதழ்: ஜுன் 2016**
**வாழ்க்கை சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளுதல்**

இளையோரை (11-21) நெறிப்படுத்தி, திறன் ஊட்டி, சமூகக் கடமையாற்றிட - விஷன்ஸ் இந்தியா - கனவு இதழ் மூலமாக மேற்கொண்டுவரும் முயற்சியில் நீங்களும் இணைந்திடுங்கள். கனவு இதழின் புரவலர்களாக ஆகுங்கள். உங்களோடு இணைந்து சாதி, மதம், இனம், மொழி, பாலின பாகுபாடுகள் கடந்த வளமையான, வலுவான, அன்பான சமூகத்தை - இளையோர்கள் மூலம் உருவாக்கிட ஆவலாக உள்ளோம்.

## 'கனவு' - இதழின் புரவலர்களாக மாறுங்கள்

மூன்று மாதத்திற்கு ஒருமுறை கனவு இதழ் வெளியிட உங்கள் நன்கொடையாக ரூ. 1000/- கொடுப்பதன் மூலம் நீங்கள் கனவு இதழின் புரவலர்களான இருப்பீர்கள். உங்கள் நன்கொடையினை காசோலையாகவோ/DDஆகவோ **Visions Global Empowerment India** பெயரில்

**விஷன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் இந்தியா**
**முதல் மாடி, 27, வயர்லெஸ் ரோடு, குறிஞ்சி நகர் மேற்கு,**
**கே.கே. நகர், திருச்சி - 620 021,**
**தமிழ்நாடு, இந்தியா**

என்ற முகவரிக்கு தொடர்புகொண்டு வழங்குங்கள்.

செல்: +91.8940051900 (Shylet)
+91. 95002.87329 (Joseph)

மின்னஞ்சல்: visionsglobalempowermentindia@gmail.com

www.VisionsIndia.org என்ற இணையதள முகவரில் சென்று விபரங்கள் அறிந்து, இணையதளம் மூலமாகவும் உங்கள் நன்கொடைகளை வழங்கலாம். நன்றி!

## புரவலர்களின் உரிமைகளும் பயன்களும்

- புரவலராகிய உங்கள் பெயர் ஒவ்வொரு இதழிலும் பிரசுரிக்கப்படும்.
- சான்றிதழும் நினைவுப் பரிசும் வருடந்தோறும் வழங்கப்படும்.
- கனவு இதழின் மூன்று புத்தகங்கள் - ஒவ்வொரு வெளியீட்டின்போதும் வழங்கப்படும்.
- ஆயிரக்கணக்கான இளையோர்களுக்கு வழி காட்டுவதில் உங்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

**வாருங்கள்... இணைந்திருப்போம்...**
**இளையோருக்கு வழிகாட்டிடுவோம்...**
**மகிழ்வான, வளமான, பாகுபாடற்ற சமுதாயம் படைத்திடுவோம்...**